இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTER
வாராந்த மின்னிதழ்
ilakku.org
SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1
இதழ் 299 சனி, ஆகஸ்ட் 10, 2024 20 பக்கங்கள்

# தமிழ்ப் பொது வேட்பாளர்;



# தேசியத்தின் அடையாளம்

அகிலன்

# ஜனாதிபதி வேட்பாளர்களின் கவனத்தைப் பெறுமா

# காணாமல் போனோர் விவகாரம்?

ஹஸ்பர் ஏ. ஹலீம்

# ஒவ்வொன்றாக வீழ்த்தப்படும் இந்தியாவின் நண்பர்கள்



வேல்ஸில் இருந்து அருஸ்

info@ilakku.org

© 2024 இலக்கு இணையம்

## கொக்குத்தொடுவாய் புதைகுழியில் மீட்கப்பட்ட தகட்டு இலக்கங்களை பகிரங்கப்படுத்தக் கோரிக்கை !



கொக்குத்தொடுவாய் புதைகுழியில் மீட்கப் பட்டதகட்டு இலக்கங்களை பகிரங் கப்படுத்துமாறு காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் சார் பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீத வான் நீதிமன்றத்தில் கொக்குத் தொடுவாய் புதைகுழி வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள் ளப்பட்ட போது,காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் சார் பில் இந்த கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.


காணாமல் போனோர் அலு வலகம் (ஓ.எம்.பி ) சார்பில் அந்த அலுவலகத்தின்சட்டத்தரணிகளும், சட்ட வைத்திய அதிகாரி கனக சபாபதி வாசுதேவா மற்றும் காணா மல் ஆக்கப்பட்டோரின் உறவினர் கள் சார்பில் சட்டத்தரணிகளான ரட்ணவேல் மற்றும் நிரஞ்சன் ஆகியோரும் காணாமல் ஆக்கப் பட்டவர்கள் உறவினர்களும் மன்றில் ஆஜராகி இருந்தார்கள்.

இந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் சார்பில் சில விண்ணப்பங்களை அவர்களது சார்பில் ஆஜரான சட்டதரணிகள் மன்றில் முன் வைத்திருந்தார்கள்.

அதாவது, 'தடயவியல்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## பிரித்தானியா கலவரம் 100 காவற்துறையினர் காயம்



பிரித்தானியாவில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக இடம் பெற்றுவரும் கலவரங்களில் இது வரையில் 100 இற்கு மேற்பட்ட காவல்துறையினர் காயமடைந்துள் ளதுடன், 400 இற்கு மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய் யப்பட்டுள்ளதாக பிரித்தானியா அரசு கடந்த வியாழக்கிழமை(8) தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு உடனடியாகவே தண்டனையை வழங்குவதன் மூலம் கலவரங்கள் தற்போது ஓரளவு தணிந்துள்ளது. ஆனால் சமூகலைத்தளங்களால் அவை மீண்டும் தூண்டப்படுவதை தான் தற்போதும் தடுக்க முடிய வில்லை என பிரித்தானியா காவல்த்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வாரம் சவுத்போர்ட் டில் மூன்று குழந்தைகள் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து இங்கிலாந்து

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

## ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ச அறிவிப்பு:

### மகிந்த இந்திய உயர்ஸ்தானிகர் சந்திப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கடந்த வியாழக்கிழமை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை சந்தித்து கலந்துரையாடியுள் ளார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெர முனவின் ஜனாதிபதி வேட்பாள ராக அக்கட்சியின் தேசிய அமைப் பாளர் நாமல் ராஜபக்ச நியமிக்கப் பட்டுள்ள நிலையில் இந்த சந்திப்பு நடந்துள்ளது.

மேலும் எதிர்வரும் செப்டம் பர் 21ஆம் திகதி நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் இந்திய புலனாய்வு சேவையான "ஹோ" வின் தலையீடுகள் அதிகமாக இருப் பதாக செய்திகள் வெளியாகிவரும் நிலையிலும், இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இந்த நிலையில், 'முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ச, இலங்கையின் அரசியல் முன்னேற்றங்கள் குறித்து கருத்துக் களைப் பரிமாறிக் கொண்டார்," என தனது தளத்தில் இந்திய உயர்ஸ்தானிகர் பதிவிட்டுள்ளார்.

## மூலோபாய நகர்வாக இந்தியா வந்த ரஸ்ய போர்க்கப்பல்கள்





ரஸ்யாவின் இரண்டு கடற் படைக் கப்பல்கள் இந்தியா வந்துள்ளதாக இந்தியாவிற்கான ரஸ்ய தூதரகம் கடந்த செவ்வாய்க் கிழமை(6) தெரிவித்துள்ளது.

ரஸ்யாவின் பசுபிக் பிராந்திய கடற்படை அணியைச் சோந்த பிரி கேற் மற்றும் குருசர் வகையை சேர்ந்த இரண்டு கப்பல்களும் கொச்சின் துறைமுகத்திற்கு வந்துள் ளன.

இது ஒரு மூலோபாய நகர்வு, இரு நாடுகளுக்குமிடையிலான மிக நெருக்கிய கடற்படை ஒத்து ழைப்புக்களை காட்டுகின்றது. கடந்த மாதம் ரஸ்யாவின் சென் பிற்றேஸ்பேர்க்கில் இடம் பெற்ற ரஸ்யாவின் 328 ஆவது கடற் படை தினத்தில் பங்கு கொள் வதற்காக இந்தியா தனது INS Tabar வகை கடற்படைக் கப்பலை

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

## அமெரிக்காவில் ஆட்சிமாற்றம் இரத்தக் களரியாகவே இருக்கும் - பைடன்



அமெரிக்காவில் நவம்பர் மாதம் இடம்பெறும் அரச தலைவர் தேர்தலின் பின்னர் ஜனவரி மாதம் இடம்பெறும் புதிய அரச தலைவரின் ஆட்சி மாற்றம் ஒரு அமைதியான வழியில் இரு க்கப்போவதில்லை. அது ஒரு இரத் தக்களரியாக இருக்கலாம் என அமெரிக்காவின்அரசதலைவர்ஜோ பைடன் கடந்த புதன்கிழமை(7) ஊடகம் ஒன்றிற்கு நேர்காணல் வழங்கும்போது தெரிவித்துள்ளார்.

குடியரசுக்கட்சியின் தலைவரும் அரச தலைவர் வேட்பாளருமான டொனால்ட் டிறம்புடனான நேரடி விவாதத்தில் பைடன்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

## அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர் அலுவலகத்திற்கு முன்பாக போராட்டம்




நிரந்தர வதிவிட உரிமை வழங் கப்படாது தொடர்ந்தும் வஞ்சிக் கப்படும்ஏதிலிகளாகிய நாம்எமக்கு நிரந்தர வதிவிட உரிமை வழங்கக் கோரி அமைதிவழிப் போராட்டம் ஒன்றை நடாத்தி வருகின்றோம். எமது போராட்டக்களத்திற்கு அணி திரண்டு வந்து எமக்கு உறுது ணையாக நிற்குமாறும் பணிவாக வேண்டிக் கொள்கின்றோம் என தமிழ் ஏதிலிகள், சிட்னி, அவுஸ் திரேலியா என்ற போராட்டக்குழு தெரிவித்துள்ளது.

அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு:

கடந்தசெவ்வாய்க்கிழமை(6) தொடக்கம் 29/1 Broadway, Punch-bowl, NSW. எனும் முகவரியில் அமைந்துள்ள அவுஸ்திரேலிய உள் துறை அமைச்சர் Tony Burke (Minister for Home Affairs of Austrlia) அவர்களின்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## ஹமாஸின் புதிய தலைவராக யாஹா சின்வர் நியமனம்

ஹமாஸின் புதிய அரசியல் பிரிவு தலைவராக யாஹா சின்வர்(61) நியமனம் செய்யப் பட்டுள்ளதாக ஹமாஸ் அமைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை(6) தெரி வித்துள்ளது.



கடந்த மாதம் 31 ஆம் நாள் ஹமாஸின் அரசியல் பிரிவின் தலைவர் இஸ்மயில் ஹனியா ஈரானில் வைத்து கொல்லப்பட் டதை தொடர்ந்து ஹமாஸ் புதிய தலைவரை நியமித்துள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் இஸ்ரேல் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதலை சின் வரே வழிநடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்து வருகின்றது.

ஹனியா வெளிநாடுகளில்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# தமிழ் பொதுவேட்பாளருக்கே ஆதரவு:

## கிழக்கு மாகாண சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியம் அழைப்பு

தமிழ் பொதுவேட்பாளர் என்பது கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்த வரையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இதற்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து சிறுபான்மை சமூகங்களும் ஆதரவு வழங்கவேண்டும் என கிழக்கு மாகாண சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,'வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம், அந்த மக்கள் அனைத்து உரிமையுடனும் வாழும் தகுதியைக் கொண்டுள்ளார்கள். வடக்கு கிழக்கு என்பது தமிழ் மற்றும் முஸ்லீம்கள் வாழும் பகுதி என்ற காரணத்தினால் இந்த நாட்டில் ஆட்சிபீடமேறிய அனைத்து சிங்கள தலைவர்களும் அந்த மக்களின் உரிமையினை மறுதலித்தே வந்துள்ளனர்.

காலத்திற்கு காலம் பல்வேறு பசப்பு வார்த்தைகளை கூறி வடக்கு கிழக்கில் வாழும் சிறுபான்மை மக்களை ஏமாற்றி தமது வாக்குகளைப் பெறும் சிங்கள ஜனாதிபதிகள் வெற்றிபெற்றதும் தமது கோரமுகத்தினைக் காட்டிய வரலாறே அதிகமாக காணப்படுகின்றது.

தமிழ் மக்களைப்பொறுத்த வரையில் இந்த நாட்டில் ஏனைய இனங்கள் அனுபவிக்கும் உரிமைகளைப்பெற்று தமது பகுதிகளை தாங்களே ஆட்சி செய்யும் கோரிக்கையினையே காலத்திற்கு காலம் விடுக்கின்றனர். அதுவும் இந்த நாட்டிற்குள் தாமும் சுதந்திரமாக வாழும் நிலைமையினை ஏற்படுத்துங்கள் என்ற கோரிக்கையினை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

இருந்தபோதிலும் எந்த கோரிக்கையினையும் ஏற்காது வடக்கு கிழக்கில் வாழும் சிறுபான்மை சமூகத்தினை அடக்கி தமது அடக்குமுறைகளையே பெரும்பான்மை ஆட்சியாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர். யுத்தம் நிறைவுபெற்று 15வருடங்களை கடந்துள்ளபோதிலும் இன்னும் சிறுபான்மை சமூகத்திற்காக எந்த சிங்கள அரச தலைவரும் செயற்படாத நிலைமையே காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையிலேயே 09வது ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவுப்புகள் வெளியாகியுள்ள நிலையில் வடக்கு கிழக்கில் தமிழ் பொதுவேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நிறுத்தப்பட்டுள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தினை தமிழ்-முஸ்லிம் மக்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் இணைந்து செயற்படுவதன் மூலமே எதிர்காலத்தில் நிம்மதியாக வாழமுடியும். இல்லாது போனால் முஸ்லிம் மக்களும் அடக்குமுறைகளுக்குள்ளாகி தமது உரிமைக்காக போராடும் நிலைமைகள் ஏற்படும்.

எனவே இன்றைய நிலையில் வடக்கு கிழக்கில் வாழும் சிறுபான்மை சமூகம் தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவு வழங்கி தமது உரிமைக்கோரிக்கையினை இலங்கை மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் சொல்லவேண்டும். இல்லாது

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# ஈழத்தமிழர் இறைமை தேர்தல் மேடையில் மீளுறுதி செய்யப்படுமளவுக்கே பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரன் தமிழ்த்தேசியத்தின் சின்னமாவார்

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு என்னும் பெயரில் 7 ஈழத்தமிழர் அரசியல் கட்சிகளும் 7 குடிசார் அமைப்புக்களும் ஒன்றிணைந்து இலங்கை அரசுத்தலைவர் தேர்தலில் பொதுவேட்பாளராக முன்னாள் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அவர்களை அறிவித்துள்ளனர். இது 1976க்குப் பின் கட்சி அரசியலில் மீளவும் கூட்டணி அரசியலை மீள் கட்டமைத்துள்ளது.இதனை உறுதி செய்யக் கூடிய விதமாக தமிழரசுக்கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவுள்ள முன்னாள் மட்டக்களப்பு இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா கலையரங்கில் அளித்த உரையும் அமைகிறது. முதலில் அவ்வுரையைச் சுருக்கமாக எடுத்து நோக்குவோம். "தமிழ்த்தேசியத்தின் குறியீடாக மட்டுமே நான் இருப்பேன். இலங்கை சோசலிசக் குடியரசின் தலைவராக வருவதற்காக நான் போட்டியிடவில்லை. தமிழ்த்தேசிய மண்ணில் இனப்படுகொலை செய்யப்பட்ட இனமாக நாங்கள் இருக்கின்றோம். எங்களுக்கான உரிமை கிடைக்க வேண்டுமென்பதற்காக அனைத்துலகத்திற்கும் தென்னிலங்கைக்கும் வலியுறுத்துகின்ற அடையாளமாக நான் இந்தத் தேர்தலில் பொதுவேட்பாளராக நான் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன். எனது பணி செப்டெம்பர் 22ம் திகதி வரை மட்டுமே இருக்கும். அதற்குப் பிற்பாடான பணிகளைத் தமிழ் பொதுக்கட்டமைப்பே எடுக்கும்" என்னும் அவரின் உரையின் முக்கிய பகுதி ஈழத்தமிழர் கட்சி அரசியலில் ஏற்பட்டிருந்த தேக்க நிலையைக் கட்டுடைப்பதற்கான அறைகூவலாக அமைகிறது.

அடுத்து "அனைத்துலக ரீதியில் நாங்கள் பேச்சுவார்த்தைக்குச் செல்கின்ற பொழுது அனைத்துலகம் ஒருமித்த குரலில் வரவேண்டும் என்றுதான் நமக்குக் கூறியது. நடைபெறவுள்ள இலங்கை அரசுத்தலைவர் தேர்தலில் ஒருகுரலில் ஒருமித்த கருத்துக்களை முன்னெடுத்துச் செல்வதற்காக தமிழ் பொதுவேட்பாளர் அடையாளப்படுத்தப்பட்டு அவருக்கு ஆதரவை மக்கள் வாக்குகளாகச் செலுத்துகின்ற பொழுது தமிழ் மக்களின் இனப்பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாதுள்ளது அவை தீர்க்கப்பட வேண்டும் என்பதை வெளிக்காட்டுகின்ற முயற்சியே இந்தப் பொதுவேட்பாளர் முயற்சி" என்னும் அவரின் விளக்கம் அனைத்துலக நிலையில் உள்ள தேக்கத்துக்கான எதிர்வினையாகவும் உள்ளது. ஆனால் அவர் "பொதுக்கட்டமைப்பு சார்பில் பலரையும் ஆராய்ந்த பின்னர் இறுதியாகச் சட்டத்தரணி தவராசவின் பெயரும் எனது பெயரும் இறுதித் தெரிவில் இருந்தது. நாங்கள் இருவரம் நண்பர்களாகவே இருக்கின்றோம். எவ்வாறாயினும் நானோ அவரோ எவ்விதமான சர்ச்சைகளுமில்லாமல் என்னை தெரிவு செய்தார்கள். இதனால் தமிழ்த் தேசியத்தின் அடையாளமாக நான் இருப்பேன்" என்கின்ற பொழுது; தமிழ்த்தேசியம் என்பது குறித்த விளக்கம் அதன் வரலாற்று வளர்ச்சி தெளிவாக்கப்படாத நிலை உண்டு என்பதை இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது.

"இலங்கை அரசுத்தலைவர் தேர்தலில் போட்டியிடுகின்றவர்கள் எத்தகையவர்கள் என்பது அனைவரும் அறிந்த விடயம். விடுதலைப்புலிகளை நான்தான் பிரித்தேன். கட்சிகளைப் பிரித்தேன். என்னை மாற்றமாட்டேன் என்றெல்லாம் போட்டியிட்டுபவர்களே அவர்கள். இவ்வாறான நிலையில் மக்களைப் பிரித்தாள்பவர்களுக்கு வாக்குகளை வழங்கப்போகின்றோமா? வடக்கில் ஒன்று தெற்கில் ஒன்று கதைப்பவர்களுக்கு வாக்குகளை வழங்கப் போகின்றோமா? வடக்கு கிழக்கைப் பிரித்தவர்களுக்கு வாக்குகளை வழங்கப் போகின்றோமா? என்பதைத் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். தமிழ்த் தேசிய இனத்தின் விடிவுக்காக பல இலட்சம் மக்களையும் போராளிகளையும் இழந்துள்ள நாம் உரிமையற்றவர்களாக இருக்கும் நிலையில் பல அரசுத்தலைவர்களைக் கண்டு ஏமாற்றமடைந்த நிலையில் இன்னும் பேரம்பேசத்தான் போகின்றோமா? இவை தொடர்பில் சிந்திக்க வேண்டும். இவற்றுக்காகத்தான் பொதுவேட்பாளராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளேன். எனவே ஒட்டு மொத்தத் தமிழ் மக்களும் எங்கள் விடிவுக்காக வாக்களிக்க வேண்டும்" என இவர் வாக்களிப்புக்கான காரணத்தைக் கட்டமைக்கையில் இனஅழிப்பு குறித்து எதுவுமே பேசாத நிலையில் இவர் தமிழ் தேசியத்தின் சின்னமாக எவ்வாறு தன்னை வெளிப்படுத்துவார் என்கிற சந்தேகத்தையும் அச்சத்தையும் ஏற்பட வைக்கிறது என்பது இலக்கின் கருத்து. இந்நிலையில் இந்த உரையினை அவர் 1979 முதல் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கும் சிறிலங்கா அரசியலமைப்பின் 1983ம் ஆண்டு ஆறாவது திருத்தத்திற்கும் கட்டுப்பட்ட நிலையிலேயே ஆற்ற வேண்டிய நடைமுறை எதார்த்தம் உள்ளதால் இது குறித்த திறனாய்வுக்குள் இலக்கு மேலும் செல்லாது. இந்த முயற்சியை இலங்கை அரசுத்தலைவர் தேர்தல் மேடையைப் பயன்படுத்தி ஈழத்தமிழர் இறைமையை எவ்வாறு ஈழத்தமிழர் தாயகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் மீளுறுதி செய்யலாம் என்பதை எடுத்து நோக்கலாமெனக் கருதுகிறது.

இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் இந்தப் பொதுவேட்பாளரின் நோக்கு என்ன அது எந்த வகையில் ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினைத் தீர்வுக்கு அவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடி நிற்கிறது என்பதைத் தெளிவாக்க வேண்டும் என்பது இலக்கின் முதல் கருத்தாக உள்ளது. இன்னும் குறிப்பாகக் கூறுவதானால் ஈழத்தமிழர்களின் உள்ளக தன்னாட்சி இழக்கப்பட்டுள்ளதைச் சான்றாதாரங்களுடன் எடுத்து விளக்கி இதனை ஈடுசெய்யாது ஈழத்தமிழர்களின் மேலான இனஅழிப்பை நடாத்த மக்கள் மேலான போரை முன்னெடுத்தே முழு இலங்கையரையும் வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்துள்ளன சிங்களக் கட்சிகள் என்பதைத் தெளிவாக்க வேண்டும். ஈழத்தமிழரின் இறைமையின் மீளுறுதி என்பது இலங்கையின் வேறெந்த இனத்துக்கும் எந்த வகையிலும் எந்த இழப்புக்களையும் ஏற்படுத்தாது என்பதையும் மாறாக எல்லா இனங்களுக்குமான எல்லா வளர்ச்சிகளுக்கும் உதவும் என்பதையும் தெளிவாக எடுத்துரைத்தல் முக்கியம் என்பது இலக்கின் நிலைப்பாடாக உள்ளது.

இந்தப் பொதுவேட்பாளர் என்பது அனைத்துலகத் தூதுவர்கள் ஈழத்தமிழர் சனநாயக வழிகளில் பங்கெடுக்க மறுப்பதினாலேயே தங்களால் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைகளில் உரிய உதவிகளைச் செய்ய இயலாதிருக்கிறது எனக் கூறிவருவதற்கு எதிர்வினையாக அமைகிறது. எனவே ஒவ்வொரு தூதரகங்களுடனும் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு தொடர்பு கொண்டு தங்களின் இந்த முடிவுக்கான தேவையை எடுத்து விளக்குவது முக்கியம். அனைத்துலக நாடுகளைப் பொறுத்த மட்டில் புலம்பெயர் தமிழர்கள் ஊடகங்கள் வழியாகவும் தங்கள் தங்கள் பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்களிடமும் ஈழத்தமிழர்கள் சனநாயக அரசியலில் பங்கெடுக்காத நிலையில் தவிப்பதற்கான காரணங்களைத் தெளிவாக்க வேண்டும். உலகின் அத்தனை நாடுகளின் தூதுவர்களுக்கும் அனைத்துலக ஆதரவினாலேயே ஈழத்தமிழர்களின் இறைமையை மீளுறுதி செய்யலாம் என்ற உண்மை உணர்த்தப்படல் முக்கியம் என்பது இலக்கின் தலையாய எண்ணம். இறுதியாக இந்தியாவின் கூட்டாண்மை, அமெரிக்க மற்றும் மேற்குலக நாடுகளின் பங்காண்மை, சீனாவின் நட்பாண்மை, ரஸ்யா மற்றும் யப்பான் உட்பட அனைத்துநாடுகளுடனுமான பல்வேறு செயலாண்மைகள் இவற்றின் மூலமே இன்று சிறிலங்கா அரசாங்கம் தன் இறைமையை நிலைப்படுத்துவதால் தமிழ் தேசியப் பொதுக்கட்டமைப்பு பொதுவேட்பாளரை மையப்படுத்தி அனைத்து நாடுகளுடனும் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு உலக அமைதிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் அறிவியல் தொழில்நுட்ப எழுச்சிக்கும் எந்த அளவுக்கு முக்கியம் என்பதை துறைசார் நிபுணர்களின் ஒத்துழைப்புடன் வெளிப்படுத்தினாலே ஈழத்தமிழர் பாதுகாப்பான அமைதி வாழ்வையும் வளர்ச்சிகளையும் பெற முடியும். இவற்றைச் சரி வரச் சரியான நேரத்தில் செய்யும் திறனே ஈழத்தமிழர்களைத் தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பை தமிழ்த்தேசியத்தின் சின்னமாகக் கருதி வாக்களிக்க வைக்குமென்பது இலக்கின் இவ்வார எண்ணமாக உள்ளது.

**ஆசிரியர்**

# தமிழ்ப் பொது வேட்பாளர்;

## தேசியத்தின் அடையாளம்

அகிலன்

"இது நடக்குமா?" என்ற பலரது கேள்விகளுக்கு மத்தியில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இறக்கப்பட்டிருக்கின்றார். தமிழ்த் தேசியத்தின் அடையாளமாக அவர் இருப்பார். இதற்கு பிரதானமாக இரண்டு நோக்கங்கள் உள்ளன. ஒன்று - சிங்கள வேட்பாளர்களை நிராகரிப்பது. இரண்டு - தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்துவது.

இந்தக் கருத்தியலுடன் இணங்கிப்போனவர்கள் சுமார் நான்கு மாத காலத்துக்கும் அதிகமாக மேற்கொண்ட முயற்சியின் இறுதியில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் பொது வேட்பாளராகத் தெரிவாகியிருக்கின்றார்.

அரியநேத்திரனின் தெரிவு என்பது தமிழ் மக்கள் பொதுக் கட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலின் முதலாவது கட்டம்தான். இதனையடுத்து முக்கியமான பல கட்டங்கள் உள்ளன. தேர்தல் விஞ்ஞாபனம் தயாரித்து வெளியிடுவது, மக்கள் மத்தியில் பரப்புரைகளை முன்னெடுப்பது, அதன்மூலம் மக்களுடைய ஆதரவைப் பெற்றுக்கொள்வது என பல பணிகள் தொடர்ச்சியாக காத்திருக்கின்றன.

தமிழ்ப் பொதுக் கட்டமைப்பில் அதற்கான குழுக்களும் அமைக்கப்பட்டிருப்பதால், அவற்றை அவர்கள் முன்னெடுப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.



பொது வேட்பாளர் இரண்டு பக்க நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியவராக இருப்பார். சிங்கள வேட்பாளர்கள் யாருமே தமிழ் வேடட்பாளரின் வருகையை ரசிக்கப்போவதில்லை.

அதேவேளையில், தமிழ்த் தேசியத்தைப் பேசிக்கொண்டே பொது வேட்பாளருக்கு எதிரான கருத்துக்களைப் பரப்புபவர்களைக் கையாள்வதும் கடினமான ஒரு பணியாகத்தான் இருக்கப் போகின்றது.

குறிப்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இதற்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றது. அதற்காக அவர்கள் முன்னெடுக்கும் பப்புரைகள் எழுந்தமான மான குற்றச்சாட்டுக்களாகவும் உள்ளன. குறிப்பாக மற்றொருவருடைய நிகழ்ச்சி நிரலுக்காகத்தான் இவ்வாறு பொது வேட்பாளர் களமிறக்கப்படுகின்றார் என்றகருத்து அவர்களால் முன்வைக்கப்பட்டாலும், அதற்கான ஆதாரங்கள் அவர்களிடம் இல்லை.

ஆதாரங்கள் இல்லாமல் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வழமையான அரசியல்தான். தமிழ்த் தேசியத்தை தீவிரமாகப் பேசிக்கொண்டு, இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் போது மக்கள் அவற்றை நம்புவார்கள் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பது உண்மையில் அகிய



இலங்கை தமிழ்க் காங்கிரஸ்தான். தேர்தல்களில் போட்டியிடும் போது அந்தக் கட்சியின் சின்னத்தில்தான் அவர்கள் போட்டியிடுகின்றார்கள்.

அதேவேளையில், இலங்கை வரலாற்றில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் முதன் முதலாகப் போட்டியிட்ட தமிழர் என்ற "பெருமை" தமிழ்க் காங்கிரஸின் தலைவராக இருந்த குமார் பொன்னம்பலத்துக்குத்தான் இருக்கின்றது. இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின்படி இடம்பெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலும் அதுதான். அப்போது தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகளாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி அத்தேர்தலைப் புறக்கணிக்கத் தீர்மானித்திருந்தது. மறுபுறத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் தமிழ் வாக்குகளைக் குறிவைத்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார்.

குமார் பொன்னம்பலம் எவ்வளவு வாக்குகளைப்பெற்றார்என்பது வேறுவிடயம்.அதுகுறித்து இப்போது ஆரயத் தேவையில்லை. ஜனாதிபதியாக வரமுடியும் என்ற நம்பிக்கையுடன் அவர் களத்தில் குதிக்கவும் இல்லை. தமிழ் மக்களுடைய அபிலாஷைகளை வெளிப்படுத்துவதற்காகத்தான் அவர் அப்போது களமிறங்கியிருந்தார். ஆக, ஒரு வகையில் பார்த்தால், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்தியலுக்கு தமிழ்க் காங்கிரஸ்தான் முன்னோடியா என்ற கேள்வியும் எழுகின்றது. இப்போது, தேர்தல் புறக்கணிப்பு என்ற கோஷத்துடன் களமிறங்கியிருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்ப் பொது வேட்பாளரை விமர்சிக்கும் கருத்துக்களையே அதிகளவில் முன்வைக்கின்றது என்பது ஒரு முரண்நகையான விடயம்தான்.

மறுபுறத்தில் தமிழரசுக் கட்சி பொது வேட்பாளர் விடயத்தில் அதிகார ரீதியாக எந்த முடிவையும் இதுவரை எடுக்கவில்லை. 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைதான் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு இதனைத் தீர்மானிப்பதற்காகக் கூடவிருக்கின்றது. ஆனால், தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரனும், சாணக்கியனும் இதற்கு எதிரான தீவிர பரப்புரைகளை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டார்கள். தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராஜா, புதிய தலைவராகத் தெரிவான சிறிதரன் ஆகியோர் பொது வேட்பாளருக்கு ஆதரவான கருத்தையே கொண்டிருக்கின்றார்கள். பல பொது நிகழ்வுகளிலும் அதனை அவர்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள்.

இந்த நிலையில் தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவரையே பொது வேட்பாளராக களமிறங்கியிருப்பது தமிழரசுக் கட்சிக்கு நெருக்கடியைக் கொடுத்திருக்கின்றது. அரியநேத்திரன் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் இருக்கின்றார். அந்தப் பொறுப்பிலிருந்து அவரை வெளியேற்றும் முடிவை தமிழரசுக் கட்சி எடுக்கலாம். அவ்வாறான ஒரு முடிவை தமிழரசுக் கட்சி எடுத்தால் யாரை அவர்கள் ஆதரிக்கப்போகின்றார்கள் என்பதையும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இடம் பெற்ற மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும், ராஜபக்ஷக்களைத் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக அடுத்ததாக இருந்த சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாச ஆகியோருக்கு தமிழர்கள் வாக்களித்தாார்கள். இவர்களில் மைத்திரி மட்டும்தான் வெற்றி பெற்றார். அவரது வெற்றிக்கு தமிழ் வாக்குகுள்தான் காரணமாக இருந்தன என்பது அனைவருக்கும் தெரியும்.

இரண்டு பிரதான கட்சிகளாக இருந்த ஐ.தே.க.வும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்த ஆட்சி அது. எதிர்க் கட்சித் தலைவர் என்ற அந்தஸ்த்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டது. எதிரணிகள் மிகவும் பலவீனமாகவே இருந்தன. அந்த நிலையில் கூட, தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய ஒரு தீர்வை மைத்திரி - ரணில் அரசினால் வழங்க முடியவில்லை. சுமார் நான்கு வருட காலம் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்று காலம் இழுத்தடிக்கப்பட்டதுதான் மிச்சம்.



தமிழ்ப் பொது வேட்பாளர் களமிறக்கப்படுகின்றார் என்றவுடன், மூன்று பிரதான வேட்பாளர்களுமே வடக்கு கிழக்கில் தமது பயணங்களை முன்னெடுக்கின்றார்கள். தமிழ் மக்களுடைய வாக்குகள் தமக்கு அவசியம் என்பதை அவர்கள் உணர்கின்றார்கள். ஆனால், ஏற்கனவே அரசியலமைமப்பில் இருக்கின்ற 13க்கு மேலாகச் செல்வதற்கு அவர்களில் யாரும் தயாராகவில்லை. அதனைவிட, மாகாண சபைத் தேர்தல் சட்டம் திருத்தப்பட்டு அதற்கான தேர்தல் தான் "மீண்டும் பதவிக்கு வந்தவுடன் நடத்தப்படும்" என்கிறார் ஜனாதிபதி ரணில்.

மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிப்பதற்கு வழியேற்படுத்தியவர்களே ரணிலும்,

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# ஜனாதிபதி வேட்பாளர்களின் கவனத்தைப் பெறுமா

# காணாமல் போனோர் விவகாரம்?

ஹஸ்பர் ஏ. ஹலீம்

“உங்கள் இராணுவத்தை நம்பிகையில் ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டார்கள்? காணாமல் போனவர்களின் குடும்பங்களை மிரட்டுவதையும் அச்சுறுத்துவதையும் நிறுத்துங்கள். நாங்கள் கேட்பது இழப்பீடுகளையோ மரணச் சான்றிதழ்களையோ அல்ல. முறையான நீதி விசாரணையே”

திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்களின் சங்கம் கடந்தவாரம் நடத்திய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்த வாசகங்களே இவை. வடக்கு கிழக்கில் ஜுலை 24,2024 தொடக்கம் ஆகஸ்ட் 01,2024 வரை எட்டு மாவட்டங்களில் இவ்வாறான பல போராட்டங்கள் நடந்தன.



இந்த நாட்டில் யுத்தம் முடிவுற்று 16 வருடங்கள் கடந்து விட்ட போதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தினமும் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காக வீதியில் இறங்கி போராடியே வருகின்றனர்.

இவ்வாறு தனது மூன்று சகோதரர்களை இழந்து தவிப்பவர்தான் தம்பலகாமம் கோயிலடியை சேர்ந்த எஸ்.விக்னேஸ்வரி வயது (54) .

காணாமல் ஆக்கப்பட்ட தனது சகோதரன் கந்தசாமி முரளிதரன் தொடர்பில் அவர் கூறுகையில்,“எனது சகோதரன் 2008.05.05 ஆம் திகதியன்று சைக்கிளில் வெளியே சென்றவர் வீடு திரும்பவில்லை தேடிப் பார்த்தோம் மூன்றாம் நாள் சைக்கிள் மாத்திரம் பட்டிமேட்டில் கிடந்தது அதன் பிறகு CID யினர் வீட்டுக்கு வந்து உடுப்பு கேட்டார்கள் வழங்கினோம் தொலைபேசியில் மாத்திரம் உரையாடுவார், எங்கிருந்து கதைக்கிறார் என்பதை சொல்ல மாட்டார் . மூன்று மாதங்கள் தொலைபேசியில்பேசியவர்பின்னர்பேசவில்லை. இது விடயமாக போகாத இடமில்லை . ஜனாதிபதி செயலகம், பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தோம் மனித உரிமைகள் ஆணைக்குழு ஐசீஆர்சி போன்றவற்றிலும் முறையிட்டோம் சகோதர் திரும்பி வரவில்லை” என்றார்



வடக்கு கிழக்கில் காணாமல் போன ஆயிரக்கணக்கானோரின் உரிமைகளுக்காக ‘வலிந்து கடத்தப்பட்டு காணாமலாக்கப் பட்டோருக்கான சங்கம்’ போராடி வருகிறது. அது மாத்திரமன்றி இலங்கை அரசாங்கம் காணாமல்




போனோர்களுக்கான ஆணைக்குழுவையும் உருவாக்கியுள்ளதுடன் அதற்கென அலுவலகம் ஒன்றையும் நிறுவி உள்ளது.

இந்த அலுவலகம் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளிடத்தில் தொடர்ச்சியாக வாக்கு மூலங்களை பெற்று வருகிறது. இவ்வாறு வாக்கு மூலம் வழங்கியவர் ஒருவர் தான் தம்பலகாமத்தை சேர்ந்த கமலினி.

“பல வாக்கு மூலங்களை ஆணைக்குழு முன்னிலையில் வழங்கியுள்ள போதிலும் எந்தவித தீர்வும் கிடைக்கவில்லை உளரீதியான பாதிப்புக்களையும் ஏமாற்றங்களையும் சந்தித்து வருகிறோம்” என தனது ஆதங்கத்தை வெளியிட்டார் .



திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 1349 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டுள்ள அலுவலக தகவல் அதிகாரி டபிள்யூ.ஜீ.எஸ்.சீ.சம்பத் தெரிவிக்கிறார்.

இது தொடர்பில் 585 சாட்சியமளிக்கும் அமர்வுகள் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார். தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“எனது கணவர் இன்னும் உயிரோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையில்தான் வாழ்கிறேன். 2008.07.10 அன்று சுங்கான் குழிக்கு பட்டியனூர் பட்டிக்கு சென்றவர் வீடு திரும்பவில்லை. கணவர் காணாமல் போகும் போது நான் நான்கு மாத கர்ப்பிணி. இப்போது எனது மகளுக்கு 15 வயதாகிறது. இது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தேன். காணாமல் போன ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தேன். எந்தவித பலனும் கிட்டவில்லை” என கிண்ணியா ஆலங்கேணியை சேர்ந்த நித்தியானந்தம் சுஜாதா வயது (54) எனும் மற்றொரு தாய் தனது கவலையை எம்மிடம் பகிர்ந்து கொண்டார்.



பலர் இவ்வாறாக குடும்ப உறவுகளை இழந்து பெரும் கவலையுடன் நாட்களை கடத்தி வருகின்றனர். தமக்கான நிரந்தர நீதியின்றி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

சர்வதேச மனித உரிமைகள் தினம், காணாமல் போனோர் தினம், சுதந்திர தினம் என எல்லா விசேட தினங்களில் கவனயீர்ப்பு போராட்டங்களை நடாத்துகின்றனர். எனினும் நீதி மட்டும் கிட்டுவதாகத் தெரியவில்லை.

காணாமல்போனஉறவுகள்பெரும்பாலானவர்கள் கணவனை இழந்த நிலையில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களாக மாறியுள்ளனர். இவ்வாறு குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் தனது கணவன் காணாமல் போனமை தொடர்பில் எல்.தேவிகா வயது (54) தனது ஆதங்கத்தை இவ்வாறு வெளிப்படுத்துறார்.



“எனது கணவராகிய லிங்கேஸ்வரன் 2008.05.20 அன்று சலப்பையாறு என்ற குடியிருப்பு பகுதியில் இருந்து திருகோணமலை நகரில் உள்ள தங்க ஆபரண கடையில் வேலை செய்து வந்தார். வேலைக்கு சென்றவர் திரும்பிவரவில்லை. மூன்று நாட்களாக தேடினேன் காணவில்லை. இவர் காணாமல் போகும் போது மூத்த மகளின் வயது ஆறு, இளைய மகளின் வயது ஒன்றரை ஆகும். இது தொடர்பில் குச்சவெளி பொலிஸில் முறைப்பாடு செய்தேன். அதனைத் தொடர்ந்து ஐசிஆர்சி,மனித உரிமைகள் ஆணைக்குழு என பல முறைப்பாடுகளை செய்தும் இன்னும் என் கணவர் கிடைக்கவில்லை. பெரும் கஷ்டத்தின் மத்தியில் பிள்ளைகளை கல்வியில் முன்னேற்றமடைய செய்ய வேண்டும் என்பதற்காக மத்திய கிழக்கு நாட்டுக்கு புலம்பெயர்ந்து தொழிலுக்காக

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# நாம் எதிர்பார்ப்பது இதைத்தான்.....

மட்டு.நகரான்

இலங்கையின் பெரும்பான்மை ஆட்சி அதிகாரத்தினை தீர்மானிக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இலங்கையின் பல பாகங்களிலும் அரசியல்வாதிகள் படையெடுத்துவரும் நிலையில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் தமிழ் பகுதிகளுக்கும் தமது விஜயங்களை சிங்கள ஜனாதிபதிக்காக போட்டியிடும் வேட்பாளர்கள் முன்னெடுத்துவருகின்றனர்.

இலங்கையில் கடந்த 50 வருடத்திற்கு மேலாக அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரங்கள், இருப்புகள் அழிக்கப்பட்டு இந்த நாட்டில் தீண்டத்தகாத சமூகமாக சிறுபான்மை சமூகத்தினை நோக்கும் பெரும்பான்மையினத்தவர்கள், தேர்தல் காலங்களில் மட்டும் தமது கரங்களை நீட்டி தமது கோர முகத்தினை மறைக்கும் நிலைமையே தொடர்ச்சியாக காணப்படுகின்றது.

வடக்கு கிழக்கில் பௌத்த மயமாக்கல்கள், காணி அபகரிப்புகள், வளச்சுரண்டல்கள், மனித உரிமை மீறல்கள் என அனைத்து வகையான எதிர்ச்செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் சிங்கள பேரினவாத சக்திகள் தேர்தல் காலங்களில் மட்டும் நல்லிணக்கம், சமத்துவம், அரசியலமைப்பு திருத்தம், 13வது திருத்த சட்டத்திற்கு மேலதிகமாக, காணி விடுவிப்பு, தமிழர்களுக்கான அதிகாரப்பகிர்வு என பல்வேறு போலி கோசங்களை நாங்கள்காலத்திற்குகாலம் பார்த்தேவருகின்றோம்.

இவ்வாறான நிலையிலேயே இந்த நாட்டில் சிங்கள ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான அறிவிப்புகள் வெளியாகி உள்ளன. இந்த நிலையில் பல்வேறு வகையான கருத்தாடல்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. வடக்கு கிழக்கு நோக்கியும் படையெடுப்புகள் இடம்பெற்று வருகின்றன.

வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம், தமிழர்கள் தமது தாயகத்தில் சுதந்திரமாகவும் தங்களை தாங்களே ஆட்சிசெய்யும் நிலைமையினை ஏற்படுத்தி சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக கடந்த 75வருடத்திற்கு மேலாக அகிம்சை ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் போராடி இன்று இராஜதந்திர ரீதியான போராட்டங்களை முன்னெடுக்கும் நிலைமையில் இவ்வாறான.

தேர்தல்களை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார்கள்?அல்லது வழமைபோன்று ஏதோவொரு பெரும்பான்மையின அரசியல்வாதியை ஜனாதிபதியாக்க துணை நிற்கப்போகின்றார்களா போன்ற பல்வேறு கேள்விகள் தொக்கி நிற்கும் நிலைமையினை இன்று காணமுடிகின்றது.

வடக்கு கிழக்கினைப்பொறுத்த வரையில் இன்றைய நிலையில் தமிழ் தேசியம் சார்ந்த செயற்பாடுகளும் தமிழர்களின் உரிமை தொடர்பான கோரிக்கைகளும் வலுவிழந்த நிலைமையிலேயே காணப்படுகின்றன. தமிழ் தேசிய அரசியலுக்குள் ஏற்பட்டுள்ள போட்டிகளும் பதவிகளுக்கான மோதல்களும் தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் சிவில்சமூக செயற்பாட்டாளர்களின் ஆளுமையற்ற போக்குகளும் இன்று தமிழ் தேசியமும் தமிழர் சார்ந்த உரிமை விடயங்களும் வலுவிழப்பதற்கு காரணமாக அமைந்துவருகின்றன.

இதேபோன்று இன்று வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் தேசிய உரிமை போராட்டத்தினையும் தமிழ் தேசியம் சார்ந்த செயற்பாடுகளையும் பலவீனப்படுத்துவதற்காக இலங்கை பௌத்த பேரினவாத சக்திகளினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அந்த வேலைத்திட்டங்கள் முறையான வகையில் செயற்படுத்துவதற்காக பல்வேறு வெளிநாட்டு அமைப்புகளும் தமிழர்கள் மத்தியில் தமிழ் தேசிய போர்வையினை போர்த்திக்கொண்டு களமிறக்கப்பட்டுள்ளமையும் எமது விடுதலைப் பயணத்தின் சறுக்கல் நிலைமைகளுக்கான காரணமாக அமைகின்றன.

இந்த நிலைமையிலேயே இன்று ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவிப்புகள் வெளிவந்துள்ள நிலையில் வடக்கு கிழக்கில் தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயமும் முன்னிறுத்தப்படுகின்றது. இந்த தமிழ் பொது வேட்பாளர் கோசம் என்பது இன்றைய நிலையில் தமிழர்களுக்கு மிக முக்கியமான விடயமாக கருதப்பட்டாலும் அதனை எவ்வாறு முன்கொண்டு செல்லவேண்டும் என்ற நிலை தெரியாதவகையில் சிவில் சமூகத்தினரின் நிலையுள்ளது..

தெளிவுபடுத்தாமல் தமிழ் பொதுவேட்பாளர் என்பது தமிழ் மக்களின் கோரிக்கைகளை குழிதோண்டி புதைக்கும் செயற்பாடுகளாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

அதாவது தமிழ் பொதுவேட்பாளர் கோரிக்கைக்கு தமிழ் மக்கள் அங்கீகாரம் வழங்காவிட்டால் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை கோரிக்கையினை நிராகரித்து சிங்கள மக்களுடன் வாழவே விரும்புகின்றார்கள் என்பதை சர்வதேசத்திற்கு சிங்கள பேரினவாத சக்திகள் கூறுவதற்கான வழிகளை ஏற்படுத்திக்கொடுக்கும். அவ்வாறான



வடக்கு கிழக்கு தமிழர்களின் சுயநிர்ணய உரிமையினை இந்த நாடும் சர்வதேசமும் அங்கீகரிக்கவேண்டும் என்பது தொடர்ச்சியான கோரிக்கையாகும். இந்த கோரிக்கையினையாவது முன்னிறுத்தி ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்கி தமிழர்கள் தமது கோரிக்கையிலும் தமது நிலைப்பாட்டிலும் உறுதியாகவுள்ளனர் என்பதை வெளிப்படுத்தவேண்டிய கட்டாய நிலையில் உள்ளபோது அதனை நிறைவேற்ற முடியாத நிலைமையினை எதிர்கொண்டுள்ளதை காணமுடிகின்றது.

கடந்த காலத்தில் வடக்கு கிழக்கு தமிழர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டபோது அதற்கான குரல்கள் மிகவும் குறைந்தளவிலேயே ஒலிக்கும் நிலைமையினை காணமுடிகின்றது.

குறிப்பாக கிழக்கில் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு அந்த பகுதி மக்கள் குரல் கொடுக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

குறிப்பாக மைலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு இன்றுவரையில் தீர்வு முழுமையாக கிடைக்காத நிலையில் அதற்காக பண்ணையாளர்கள் மட்டுமே போராடும் நிலைமையே உள்ளது. .வடகிழக்கு தமிழர்களுக்கு அநீதிகள் ஏற்படும்போதும் தமிழர்களுக்கு எதிரான பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுத்தபோதும் அதற்கு எதிராக குரல் கொடுக்காமல் ஒளிந்திருந்தவர்கள் இன்று பொது வேட்பாளர் தொடர்பில் பேசும் நிலைமைகள்தான் இன்றுபல்வேறுசந்தேகங்களைஏற்படுத்தியுள்ளது.

தமிழர்களுக்கான அநீதிகள் நேரும்போது குரல்கொடுக்காதவர்கள் இன்று தமிழர்களின் விடயத்தில் நிலையான தீர்வு வேண்டும் என்பதற்காக பொதுவேட்பாளரை களமிறக்குகின்றோம் என்று கூறுவது தமிழர்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதே நிதர்சனமாக காணப்படுகின்றது.

இந்த சந்தேகங்களை போக்காமல் அல்லது நிலைமையொன்று ஏற்படுமனால் எதிர்காலத்தில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் முற்றுமுழுதான சிங்கள மயப்படுத்தலுக்குள்ளாகும் நிலைமை ஏற்படும்.

இவ்வாறான நிலையிலேயே தமிழ் பொது வேட்பாளர் விடயம் என்பது தமிழ் மக்கள் மத்தியில் கொண்டுசெல்லப்பட்டு பிரகடனப்படுத்தப்படவேண்டும். அதனை விடுத்து அரசசார்பற்ற நிறுவனங்களிலும் பல்வேறு அமைப்புகளிலும் ஆட்கள் திரட்டுவோர், கூட்டம் சேர்ப்போரைக்கொண்டு கூட்டங்கள் நடாத்தி அதனை தமிழ் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதனால் நிச்சயமாக தமிழ் மக்களின் ஆதரவினைப்பெற்றுக்கொள்ளமுடியாது.

பொங்கு தமிழ் போன்ற விடயங்களை செய்து அதனை மக்கள் பயப்படுத்தி செய்வதன் மூலமே தமிழ் மக்கள் மத்தியில் பொதுவேட்பாளர் தொடர்பிலான எழுச்சியை ஏற்படுத்தமுடியும்.

அண்மையில் மட்டக்களப்பில் கிழக்கு மாகாணத்திற்கானதெளிவூட்டல்செயலமர்வுநடைபெற்றது.

இந்த கருத்தரங்கில் 100க்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டதாகவும் கிழக்கில் பொது வேட்பாளருக்கு ஆதரவு தளம் அதிகரித்து வருவதாகவும் பல்வேறு ஊடகங்கள் ஊடாக செய்திகள் வெளிவந்ததையும் காணமுடிந்தது. ஆனால் அந்த கூட்டத்தில் கலந்துகொண்ட புகைப்படத்தில் உள்ளவர்களை பார்த்தால் அவர்கள் கிழக்கு மாகாணத்தில் எந்தவித உரிமை ரீதியான போராட்டங்களிலும் வேலைத்திட்டங்களிலும் ஈடுபடாதவர்களாகவும் ஆனால் அரசசார்பற்ற நிறுவனங்களிலும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டவர்களாவும் உள்ளனர்.

இவ்வாறான நிலைமைகள் மாற்றப்பட்டு உளப்பூர்வமாக பொதுவேட்பாளர் தெரிவு என்பது இடம்பெற்று அதனை தமிழ் மக்கள்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# பனங்கொட்டை நடுவார்களா இல்லை மக்களை காப்பாற்றுவார்களா?

அண்மையில் மன்னார் மருத்துவமனையில் வைத்தியர்களின் ஆணவத்தினாலும், கவனயீனத்தினாலும் இளம் தாய் மரணமடைந்திருந்தார்.



தம்மை சட்டம் ஒன்றும் செய்ய முடியாது என்ற திமிர் தான் இந்த வைத்தியர்களின் அசமந்தப் போக்கிற்கான காரணம். அதுவும் உண்மை தான் ஏன் என்றால் இதுவரை இடம்பெற்ற வைத்தியசாலை மரணங்களுக்கு என எந்த வைத்தியரும் தண்டிக்கப்படவில்லை.

இலங்கை அரசு மேற்கொண்ட படுகொலைகளுக்கு நீதி வேண்டும் என போராடும் தமிழ் அமைப்புக்கள், புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள், பொது கட்டமைப்புக்கள், அரசியல்வாதிகள், தேசியவாதிகள், புரட்சியாளர்கள் கூட தமது கண்முன் நடக்கும் மரணங்களுக்கு நீதி வேண்டும் என போராடுவதன் மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான மரணங்கள் ஏற்படுவதை தடுக்க முன்வரவில்லை என்பது தான் வேதனையானது.

**இது தொடர்பில் திருநாவுக்கரசு தயந்தன் எழுப்பிய கேள்விகளை நாம் இங்கு தருகின்றோம்.**

**வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக் கூறலும்!**

தெய்வத்துக்கு நிகராக கருதப்படுகின்ற மருத்துவத்துறையில் வெளிப்படைத் தன்மையும் பொறுப்புக்கூறலும் தொடர்ந்து குறைந்து வருவதாகவே தோன்றுகிறது.

"வைத்தியரிடமும் வக்கீலிடமும் உண்மையை மறைக்க கூடாது" என்று சொல்வார்கள். அதற்காக வைத்தியர்களும் வக்கீல்களும் உண்மைகளை மறைப்பது நியாயமாகுமா?

மன்னார் பொது வைத்தியசாலையில் இடம்பெற்ற இளம் தாயின் மரணம் தொடர்பில் மருத்துவமனையோ அல்லது மாகாண மருத்துவத்துறையோ அல்லது GMOA போன்ற மருத்துவ சங்கங்கள் ஏதாவது விளக்கமளிக்கும் அறிக்கையை பொதுமக்களுக்கு வெளியிட்டுள்ளனரா?

**அவ்வாறு எதுவும் இல்லை எனின் அதற்கான காரணம் என்ன?**

எமது நாட்டின் மருத்துவத்துறை உலகின் பல நாடுகளின் மருத்துவத்துறையை விட மேம்பட்டது என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் அந்த மருத்துவத்துறையினுள் இருக்கும் ஊழல்வாதிகள், சுயநலவாதிகளின் செயற்பாடுகளை தட்டிக்கேட்க வக்கில்லாமல் மொத்த துறையும் இயங்குவது என்பது வெட்கக்கேடானது என்பதிலும் மாற்றுக் கருத்தில்லை. அவ்வாறானவர்களின் செயற்பாடுகளால் தான் உண்மையில் மருத்துவத்துறையின் மாண்பை பாதுகாக்கும் பல வைத்தியர்களும் அவப்பெயர் வாங்கும் நிலை உருவாகிறது.

டாக்டர். அருச்சுனாவின் பல அணுகுமுறைகளில் எனக்கு மாற்றுக்கருத்துகள் இருந்தாலும், மேற்படி மன்னார் வைத்தியசாலை விடயத்தில் நீதிகேட்டு பொதுமகனாக வந்த அரிச்சுணாவை கைதுசெய்வதிலும், ஜாமீனை நிராகரிப்பதிலும் காட்டிய அக்கறையை ஏன் பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்திற்கான நீதியில் குறிப்பாக தாயை இழந்த அந்த பச்சிளங் குழந்தைக்கான நீதியில் காட்ட முடியவில்லை?



குறைந்தபட்சம் இந்த இழப்பினை புரிந்து கொள்ளும் பண்பையாவது மருத்துவத்துறை சார்ந்தவர்கள் கொண்டிருப்பது அத்திய அவசியம் அல்லவா? ஆனால் அந்த வைத்தியசாலையில் எடுக்கப்பட்டிருந்த காணொளிகளில் வார்த்தைகளை உமிழ்ந்த வைத்தியர்கள் அல்லது காற்சட்டையுடன் நின்று பேசிக்கொண்டிருந்த (ஆள் என்ன பதவி என்று தெரியவில்லை) நபர் உள்ளிட்டவர்களின் நடத்தையை பார்க்கும் போது உண்மையில் அந்த அப்பாவிப் பெண்ணிற்கு அநீதி இழைக்கப்படும் வாய்ப்பு இருப்பதையே ஒரு சாதாரண பார்வையாளனாக உணர முடிகிறது.



இவ்வாறான நடத்தைகள் தானே பல வைத்திய சாலைகளில் மக்களின் நம்பிக்கை குறைவதற்கு காரணமாகின்றன.

அரிச்சுணா விடையத்தில் அவரது அணுகுமுறைகள் தவறு என்று குரல் கொடுத்த GOMA உள்ளிட்ட சங்கங்களும் வைத்தியர்களும் ஏன் இவ்வாறான விடயங்களில் வாய் திறக்கவில்லை? அரிச்சுணாவுக்காக பகீஸ்கரித்த எந்த வைத்தியரும் மன்னார் விடயத்தில் அமைதி காப்பது ஏன்?

அரிச்சுணா போன்றவர்களுக்கே கேள்வி கேட்க அனுமதி இல்லாத போது சாதாரண மக்களுக்கான நீதி எட்டாக்கனியாக அல்லவா இருக்கப்போகிறது.

ஆர்தீகன்

**யாழ் வைத்தியசாலையில் சில காலங்களுக்கு முன்னர் கையை இழந்த சிறுமிக்கான விசாரணை அறிக்கை எங்கே?**

**என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?**

பிரச்சினைகள் நடக்கும் போது விசாரணைகள் நேர்மையாக முன்னெடுக்கப்பட்டு வெளிப்படைத்தன்மையுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டால் வைத்தியத்துறையின் மாண்பும் மேம்படும். மக்களும் சந்தேகப்படமாட்டார்கள்.



மன்னார் மாவட்டம் மட்டுமல்ல வடக்கின் அரசியல்வாதிகள் எங்கே போனார்கள்? அரிச்சுணாவுக்கு ஆதரவு பெருகிய போது அதை வளைத்துப்போட வரிசையாக சென்றவர்கள் மன்னார் விடயத்தில் மௌனம் காப்பது ஏன்?

இதுவரை துறைசார்ந்தவர்களிடம் இருந்து ஒரு பேட்டியை கூட காணமுடியவில்லை.

**விசாரணை என்ன அமெரிக்காவிலா நடக்கிறது?**

வடக்கை பொறுத்தவரை வெளியில் இருந்து அழிப்பதை விட உள்ளே இருப்பவர்களின் சுயலாபங்களுக்காகவும் உண்மைகளை மூடி மறைத்து மறைத்தே எம்மையும் எமது மாண்பையும், உண்மையான வைத்தியர்களின் சேவைகளையும் களங்கப்படுத்தி அழித்துக் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.



அரிச்சுணாவால் ஒட்டுமொத்த மருத்துவத்துறையின் முறைகேடுகளை பேசமுடிந்திருக்கிறது. அந்த தற்துணிவு பலருக்கும் இருந்ததில்லை. இதனால் மருத்துவத்துறை சார்ந்த பிரச்சினைகள்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்



# இந்திய இராணுவத்தினரின் வல்வைப் படுகொலைகளின்

## 35ஆவது ஆண்டு நினைவுகள்... !

**பாகம் 2**

**வல்வைப் படுகொலைகள் தொடர்பாக வெளிநாட்டுஊடகங்களும்,மனிதஉரிமைஅமைப்புக்களும் வெளிப்படுத்திய அறிக்கைகள்:**

*இலங்கையில் அமைதிகாக்கவந்த இந்தியப் படையினரால் 1989ஆம் ஆண்டு ஆகஸ்ற் 2, 3, 4 ம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட அந்தப் படுகொலைகள் தொடர்பான முழுமையான விபரங்களையும், ஆதாரங்களுடன் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினரால் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தப்பட்டது.அதனைத் தொடர்ந்து பல வெளிநாட்டுஊடகவியலாளர்களும்,மனிதஉரிமை அமைப்புக்களும் வல்வெட்டித்துறைக்கு நேரடியாகவே வருகைதந்து அங்கு தாம் கண்ட கொடூரங்களைத் தமது அறிக்கைகளின் ஊடாகப் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளனர்.*

- ***ரீற்றா செபஸ்ரியன், (Rita Sebastian) பத்திரிகையாளர், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (Indian Express)***

*இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளைத் தொடர்ந்து, சில நாட்களின் பின்னர், வல்வெட்டித்துறைக்கு விஜயம் செய்த ரீற்றா செபாஸ்ரியன் என்ற இந்திய பத்திரிகையாளர் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் 1989.08.24 அன்று பின்வருமாறு குறிப்பிட்டார்:*



*"இந்திய அமைதிப்படையினர்,தமது வீரர்கள் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து எதிர்நடவடிக்கைகளில் ஈடுபட்டதில் நிராயுதபாணிகளான 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். நான் வல்வெட்டித்துறைக்குச் சென்றபொழுது, வல்வெட்டித்துறை இப்பொழுது பாலைவனமாகக் காட்சியளிக்கின்றது. சனத்தொகையில் அரைவாசிப்பேர் இடம்பெயர்ந்து அயற் கிராமங்களுக்குச் சென்றுவிட்டனர். எரிக்கப்பட்ட பல வீடுகளைச் சென்று பார்த்தபொழுது,அங்கே சுவர்களினல் இருந்த காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ் போன்ற இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களின் படங்கள்கூட எரித்து நொருக்கப்பட்டுள்ளன.வித்தனை என்ற இடத்தில் உள்ள மார்க்கண்டு சுப்பிரமணியம் என்ற இளைப்பாறிய நில அளவையாளர் அத்தியட்சகரின் வீட்டில் இந்திய இராணுவத்தினர் கண்மூடித்தனமாகச் சுட்டதில் அதில் இருந்து தப்பிய ஒருவர் பின்வருமாறு தெரிவித்தார்:*

*"வீட்டிற்குள் எங்களுடன் குழந்தைகளைத் தவிர மேலும்பல ஆண்களும் பெண்களும் இருந்தனர். நாங்கள்ஒருஅறையினுள்பதுங்கியிருந்தோம்... ஓகஸ்ற் 2 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் யாரோ ஒருவர் நாங்கள் இருந்த வீட்டின் கதவைத் தட்டினார். வீட்டை உடைத்துக் கொண்டுவந்த இந்திய அமைதி காக்கும் படையினரின் கண்களில் முதலில் பட்ட சுப்பிரமணியத்தைத் தான் ஒரு சேவையர் சுப்பரின்டன்ற் என்று கூறிக் கெண்டிருக்கும் பொழுதே அவரைச் சுட்டுக் கொன்றனர். அதற்குப்பின்னர் ஆண்களையும், பெண்களையும் தனித்தனியாக நிற்குமாறு கட்டளையிட்டனர்.*



*அவர்கள் முதலில் ஆண்களையும், பின்னர், பெண்களையும் சுட்டுக்கொன்றனர். அப்பொழுது எனது உடலிலும் காயம் ஏற்பட்டதால், நான் இறந்தவர்களுடன் தரையில் விழுந்துபடுத்து இறந்து விட்டதாக நடித்து ஆயுதப்படைகள் வெளியேறியபிறகு எழுந்தேன். என் அம்மாவும் சகோதரனும் இறந்து விட்டதைக் கண்டேன்,அங்கே எல்லாமாக மொத்தமாக ஒன்பது பேர் சுட்டுக்கொல்லப் பட்டனர்..*



**வல்வை.ந.அனந்தராஜ்**

*பின்னர் நான் எனது மற்றைய சகோதரரையும், சகோதரியைதயும் தேடி மாடந்தைப் பிள்ளையார் கோவிலடிக்கு புறப்பட்டேன். அப்பொழுதும் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்தும் பிறப்பிக்கப்பட்டதால் என்னால் திரும்பி வர முடியவில்லை.*




*பின்னர், 4.8.89 அன்று பிற்பகல் 2 மணியளவில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டது. நாங்கள் சேர்வையர் சுப்பிரமணியத்தின் வீட்டிற்குச் சென்றபோது,சுட்டுக்கொல்லப்பட்ட ஒன்பது பேரின் சடலங்களும் அந்த நந்த இடங்களிலேயே இருந்து அழுகிய நி லையில், துர்நாற்றம் வீசி மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்தது. இறந்து கிடந்தவர்களை அடையாளம்காண முடியவில்லை. ஆனால், எனது சகோதரர் மற்றும் தாயை அவர்கள்அணிந்திருந்தஆடைகளில்இருந்துஅடையாளம் கண்டேன். மாலை 5.30 மணியளவில், அக்கம்பக்கத்தினரின் உதவியுடன், இந்த இருவரின் சடலங்களையும், மற்றைய ஏழு இறந்த உடல்களையும் பக்கத்து நிலத்தில் உள்ள ஒருகுழியில் போட்டுத் தகனம் செய்தோம். அதே நாளிலேயே மார்க்கண்டு சுப்பிரமணியத்தின் மூத்த மாற்றுத்திறனாளியான மகனும் சிறிது தூரத்தில் இருந்த அவரது கடையில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.*

- ***தி நியூஸ்லைன் (THE NEWS LINE)***

*தி நியூஸ்லைன் (THE NEWS LINE) AUGUST15, 1989) வல்வெட்டித்துறையில் ஆகஸ்ட் 2,3,4 ஆம் திகதிகளில் நடைபெற்ற படு கொலைகள், சித்திரவதைகள் பற்றிய செய்திகள் பல நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளன. மக்கள் நெருக்கமாக உள்ள வல்வெட்டித்துறைச் சந்தைப் பகுதியில் இந்திய இராணுவத்தினர் சரமாரியாக எழுந்தமானமாகச் சுட்டதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட பெருமளவில் கொல்லப்பட்டனர்.*



*பின்னர் வீடுகளிலும், கடைகளிலும் இருந்து பொதுமக்களை இழுத்துச்சுட்டுக்கொன்று, பல வீடுகள், கடைகள், மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றையும் எரித்துச் சாம்பாராக்கினார்கள். திரு. பிரபாகரனினதும், மற்றும் சில விடுதலைப் புலிகளின் தலைவர்களினதும் சொந்த ஊராக இருப்பதாலும்,தமிழ்ப்புலிகளை இந்தியப் படையினரால் வெல்லமுடியாது இருப்பதாலும், பழிவாங்கும் நடவடிக்கையாகவே இத்தகைய படுகொலைகளை மேற்கொண்டுள்ளனர்.*

**தொடரும்...**

# முறைகேடுகளை கேடயமாக காத்து நிற்கும் தமிழ் சட்டவாளர்கள்



மயூரன்

வடக்கு கிழக்கில் மனிதாபிமானம் இறந்து நாளாகிவிட்டது என்பதை சாவக் கச்சேரி மருத்துவமனை மற்றும் யாழ் போதனா வைத்தியசாலை முறைகேடுகளுக்கு பின்னர் மன்னாரில்இடம்பெற்றமருத்துவபடுகொலையை விசாரணை செய்ய சென்றவரை கைது செய்து சிறையில் அடைத்த சம்பவமும் கொலையில் ஈடுபட்டவர்கள் சுதந்திரமாக வெளியில் நடமாடும் சம்பவமும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது.



27 வயதான சிந்துஜாவின் மரணம் முற்று முழுதான மருத்துவப் புறக்கணிப்பால் ஏற்பட்டது என்று தெரிந்தும் இதுவரையில் எந்த பொது அமைப்புக்களோ அல்லது வடக்கு கிழக்கில் உள்ள 13 இற்கு மேற்பட்ட மகளிர் அமைப்புக்களோ, பொதுமக்களின் பிரதிநிதிகள் என்று தம்மை அழைத்துக்கொள்ளும் அரசியல்வாதிகளும் பாதிக்கப்பட்ட இந்த பெண்ணுக்காக காத்திரமான நடவடிக்கை எதனையும் இதுவரையில் மேற் கொள்ளவில்லை.

ஆனால் அதனை தட்டிக் கேட்கச் சென்ற வைத்தியர் அர்ச்சுனா கொலை குற்றம் செய்தவர் போல பிணைகூட வழங்கமுடியதா நிலையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்தசம்பவத்தைநினைத்துபாதிக்கப்பட்ட மக்கள் வேதனையால் வாடும்போதும் சிலர் அதனை கொண்டாடவும் செய்கின்றனர். அர்ச்சுனா வின் தொலைபேசியால் தமக்கு நிம்மதி போகுது என்று சமூகவலைத்தளங்களில் ஒப்பாரி வைக்கும் நவீன சேக்குவாராக்களுக்கு இது ஆனந்தமான செய்தி தான்.



இந்த நவீன சேக்குவாராக்கள் 1970களில் இருந்திருந்தால் மக்களை பாதுகாக்க முழங்கிய பிரபாகரனின் துப்பாக்கியையும் வாங்கி ஒழித்து வைத்திருப்பார்கள்.

ஆனால் இப்படிப்பட்ட தேசியவாதிகள், அரசியல்வாதிகள், சேக்குவாராக்கள், பொது அமைப்புக்கள், மகளிர் சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களை எமது இனம் கொண்டுள்ளதை நினைத்து எமது தேசம் இன்று வெட்கி தலைகுனிந்து நிற்கின்றது.

இதனிடையே இந்த மருத்துப் புறக் கணிப்புக்கள், முறைகேடுகள் மற்றும் அதிகாரத் துஸ்பிரயோகங்கள் தொடர்ந்தவண்ணமே உள்ளன. தற்போது பருத்தித்துறை மருத்துவமனையிலும் அதிகார துஸ்பிரயோகங்கள் நிகழ்ந்துள்ளது.

அதாவது அவசர நோயாளர் காவு வாகனத்தில் வீடு திரும்புவதற்காக, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலைக்கு மாற்றப்பட்ட நோயாளர்களை அலைக்கழித்து காக்கவைக்கப்பட்ட சம்பவம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நிலையில் மேலதிக சிகிச்சைக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றுமாறு வைத் தியர்களினால் பரிந்துரைக்கப்பட்ட நோயாளர்கள் சுமார் இரண்டு மணி நேரம் அலைக்கழிக்கப்பட்டு காக்கவைக்கப்பட்டே அவசர நோயாளர் காவு வாகனத்தின் மூலம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.




பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு பரிந்துரைக் கப்பட்ட நான்கு நோயாளர்கள் கடந்த வெள்ளிக் கிழமை (ஓகஸ்ட்-02) அவர்கள் சிகிச்சை பெற்று வந்த விடுதிகளில் இருந்து சக்கர நாற்காலிகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு இயங்கும் புதிய கட்டிடத்தின் கீழ் தளத்திற்கு அன்றைய தினம் மதியம் 2.00 மணியளவில் கொண்டுவரப்பட்டிருந்தனர்.

இருதய பாதிப்பு காரணமாக அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நபர் அம்பியூலன்ஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டிருந்த நிலையில் மற்றைய நோயாளர்களும் அதில் ஏற்றப்பட்டிருந்தனர். சிறிது நேரத்தில் இருதய நோயாளி தவிர்நத ஏனைய நோயாளர்கள் அவசரமாக அதிலிருந்து இறக்கப்பட்டனர்.

மருந்து குடித்து உயிரை மாய்த்துக் கொள்ள முயன்ற இளம் யுவதி ஒருவர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு உடனடியாகவே அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட வேண்டியிருந்ததால் அவ்வாறு அவர்கள் இறக்கப்பட்டதற்கான காரணம் அங்கிருந்த ஊழியர்களினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்து டன் மற்றைய அம்பியூலன்ஸ் வந்து கொண் டிருப்பதாகவும் வந்த உடன் அதில் ஏற்றி அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மற்றைய அம்பியூலன்ஸ் வண்டி உடனடி யாகவே வந்திருந்த போதிலும் காக்கவைக் கப்பட்ட நோயாளர்களை விடுதிக்கு அழைத்து சென்று விடுமாறும் மாலை 4 மணிக்கு பின் னரே அம்பியூலன்ஸ் புறப்படும் எனவும் அம்பியூலன்ஸில் நோயாளர்களை அனுப்பும் விடயத்திற்கு பொறுப்பான சிற்றூழியரான பெண் உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.




இதையடுத்து ஏனைய சிற்றூழியர்கள் அதிருப்தியை வெளிக்காட்ட முடியாது நோயா ளர்களை விடுதிக்கு கொண்டு சென்றிருந் தனர். இந்நிலையில் திடீரென உடனடியாக நோயா ளர்களை பழைய வெளிநோயாளர் பிரிவு வாசல் பகுதிக்கு கொண்டு வருமாறு சிற்றூழியர்களுக்கு அறிவுறுத்தல் வந்துள்ளது. இதையடுத்து 06 ஆம் இலக்க விடுதியில் இருந்த நோயாளியை மீண்டும் சக்கர நாற்காலி மூலமாக அழைத்துச் சென்று அம்பியூலன்சில் ஏற்றிய நிலையில் புதிய கட்டடப் பகுதியில் வைத்து ஏனைய இரு நோயாளிகளும் அன்று பிற்பகல் 03.30 மணியளவில் ஏற்றப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஏற்றப்பட்ட போதிலும் அம் பியூலன்ஸ் புறப்படாது காத்திருந்துள்ளது. ஏற்கனவே ஒரு அம்பியூலன்சில் ஏற்றி இறக்கப் பட்டதுடன் மீளவும் விடுதிக்கு அழைத்துச் சென்று அலைக்கழித்த நிலையில் அவதியுற்ற நோயாளிகள் மேலும் ஏற்பட்ட காலதாமத்தினால் அதிருப்தியடைந்து அம்பியூலன்ஸ் சாரதியிடம் தாமதத்திற்கான காரணத்தை வினவியபோது கடும் தொனியில் அதிருப்தியுடன் இதோ வாறா.. அவவிடமே கேளுங்கள் என்பதாக அம்பியூலன்சில் சாதரண உடையில் ஏறிய பெண்ணை காட்டி கூறியிருந்தார். அத்துடன் அவர்கள் ஏதோ கேக்கி னம் அதுக்கு பதில் சொல்லுங்கோ அதுக்கு பிறகு எடுக்கிறன் என குறித்த பெண்ணிடம் சாரதி தெரிவித்திருந்தார். குறித்த பெண் எதுவும் நடக்காதவர் போன்று அமைதியாக இருக்க சுமார் நான்கு மணியை நெருங்கும் நேரத்தில் அம்பியுலன்ஸ் புறப்பட்டது.

சாதாரண உடையில் தாமதமாக வந்து ஏறிய அம்பியூலன்ஸில் நோயாளர்களை அனுப்பும் விடயத்திற்கு பொறுப்பான சிற்றூழியரான பெண் உத்தியோகத்தரை புத்தூர் சந்திக்கு அண்மித்த பகுதியில் இறக்கிவிட்டுவிட்டு நோயாளர்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நோக்கி பயணித்தது அம்பியூலன்ஸ்.

அம்பியூலன்ஸில் நோயாளர்களை அனுப் பும் விடயத்திற்கு பொறுப்பான சிற்றூழி யரான குறித்த பெண் உத்தியோகத்தர் தனது கடமை நேரம் முடிந்த பின்னர் அம்பியூலன்சிலேயே வீடு திரும்பும் நோக்கிலேயே மதியம் 2.30 மணிக்கு அனுப்பவேண்டிய நோயாளர்களை 4.00 மணி

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# நிறைவேற்று ஜனாதிபதி முறை
# சிறுபான்மைக்கு பாதுகாப்பானதா ?

துரைசாமி நடராஜா

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21 ம் திகதி இடம்பெறவுள்ளது. இந்நிலையில் மலையக கட்சிகள் உள்ளிட்ட நாட்டின் ஏனைய கட்சிகள் பலவும் தேர்தலை வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கு தயாராகி வருகின்றன. இதனிடையே மலையக கட்சிகள் தாம் ஆதரிக்கும் ஜனாதிபதி வேட்பாளரிடம் மலையக மக்கள் நலன்சார் கோரிக்கைகள் பலவற்றையும் முன்வைத்து அவற்றை சாதகமாக்கிக் கொள்ளும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன.



இலங்கையின் தேர்தல் வரலாற்றில் ஜனாதிபதி தேர்தல் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாக கருதப்படுகின்றது. இந்த வகையில் நாட்டில் நடைமுறையிலுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை 1978ம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின் ஊடாக அறிமுகம் செய்யப்பட்டது. 1972 இல் பெயரளவு அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியே காணப்பட்டதோடு அரசியல் திட்டத்தின் 7 ஆவது அத்தியாயம் குடியரசு ஜனாதிபதி குறித்து பின்வருமாறு எடுத்துரைக்கின்றது. இலங்கை குடியரசுக்கு ஜனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் ஆட்சித்துறையின் தலைவராகவும், ஆயுதம் தாங்கிய படைகளின் தலைவராகவும் இருப்பார். போர், சமாதானம் என்பவற்றை பிரகடனம் செய்யவும், தேசிய சபையைக் கூட்டவும், கூட்டத் தொடர்களை நிறுத்தவும், தேசிய பேரவையைக் கலைக்கவும் அதிகாரமுடையவராகவும் இருப்பார். அவர் முதலமைச்சரையும், அமைச்சர்களையும், பிரதியமைச்சர்களையும் நியமிப்பார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சோல்பரி அரசியல் திட்டத்தின் மகாதேசாதிபதியினை விட, அதிகாரங்களைப் பொறுத்தளவில் அதிகளவு வேறுபாடு உடையவராக ஜனாதிபதி இருக்கவில்லை. ஆனால் 1972 ம் ஆண்டு அரசியல் திட்டத்தின் கீழ் ஜனாதிபதி பிரித்தானிய மகாராணியாரின் பிரதிநிதியாக கடமையாற்றவில்லை. அத்தோடு மகாராணியாருக்கிருந்த கடமைகள் சில ஜனாதிபதியை வந்தடைந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



இதேவேளை துரித பொருளாதார அபிவிருத்திக்கு பாராளுமன்றத்தினால் கட்டுப்படுத்தப்படாத நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி தேவையென்று கருதப்பட்டதன் விளைவாக,1978 ம் ஆண்டு யாப்பினூடாக நிறைவேற்ற அதிகாரம் மிக்க ஜனாதிபதி பதவி உருவாக்கப்பட்டது. ஜனாதிபதியானவர் தேர்தல் ஒன்றின் மூலம் மக்களினால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவார். ஜனாதிபதி தேர்தலில் மூன்று வேட்பாளர்கள் போட்டியிடும் இடத்து வாக்காளர்கள் விரும்பினால் தமது இரண்டாவது விருப்பு வாக்கையும் தெரிவிக்க முடியும். மூன்று வேட்பாளர்களுக்கு மேல் போட்டியிட்டால் இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகளையும் தெரிவிக்கலாம். என்றபோதும் இத்தேர்தலில் வாக்காளர்கள் பெரும்பாலும் ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பதனையே அவதானிக்க முடிகின்றது. சட்டத்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை என்பவற்றில் கணிசமான அதிகாரங்களை கொண்டவராக நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி விளங்குகின்றார்.

## நல்ல சகுனம்

நிறைவேற்று ஜனாதிபதி முறை பல நன்மைகளுக்கு வித்திடுவதாக புத்திஜீவிகள் சுட்டிக் காட்டுகின்றனர். பாராளுமன்றத்தினால் கட்டுப்படுத்தப்படாத வகையில் நிர்வாகத்துறை இருப்பதனால் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கு உதவக்கூடிய நிலைமையுள்ளது. நிர்வாகச் செயற்பாடுகளில் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்ப்பதற்கு முடியும். 1978 ம் ஆண்டு அரசியல் யாப்பின் ஊடாக ஜனாதிபதி ஒருவராக தெரிவதற்கு நாட்டின் சகல இன மக்களினதும் பங்களிப்பு அவசியமாகும். இந்நிலையில் சிறுபான்மை மக்களின் வாக்குகளும் அவசியமென்பதால் அவர்களின் நலன்கள் தொடர்பிலும் ஜனாதிபதி கரிசனையுடன் செயற்படுவார். சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரையில் இது ஒரு நல்ல சகுனமாகும். தேர்தல்கள் ஜனநாயகத்தின் உறுதிப்பாட்டுக்கு உந்துசக்தியாக விளங்குகின்றன. இந்த வகையில் ஜனாதிபதி தேர்தல் முறை அதிகளவில் ஜனநாயகத் தன்மை மிக்கதாகவுள்ளது என்றெல்லாம் நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு சார்பாக கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இந்நிலையில் இந்த ஜனாதிபதி தேர்தல் முறைமையை விளங்கிக் கொள்வதில் பாமர மக்கள் சிரமப்படுகின்றனர். ஜனாதிபதியை பதவி நீக்குவதென்பது கடினமான ஒரு விடயமாகவுள்ளது. நிறைவேற்று ஜனாதிபதியிடம் அதிகாரங்கள் பலவும் குவிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் அதிகார துஷ்பிரயோகம் செய்வதற்கு அது வாய்ப்பளிக்கலாம். ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு போன்ற விடயங்களை அவர் தனக்கு சாதகமாகவும் பயன்படுத்தக்கூடும். பாராளுமன்ற நடவடிக்கைகளில் ஜனாதிபதியின் தலையீடு பாராளுமன்ற இறைமையை பாதிப்பாகவுள்ளது என்றெல்லாம் நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு எதிரான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதனிடையே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் நோக்கிலான கருத்து வெளிப்பாடுகள் இருந்து வருகின்றபோதும் சாதக விளைவுகள் இன்னும் ஏற்படவில்லை.

1978 ம் ஆண்டுக்கு பிந்திய காலப்பகுதியில் ஜே.ஆர்.ஜயவர்த்தன, ஆர்.பிரேமதாச, டி.பி. விஜேதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோத்தபாய ராஜபக்ச சமகாலத்தில் ரணில் விக்ரமசிங்க போன்றோர் நாட்டில் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி பதவியை அலங்கரித்துள்ளனர். இப்பதவியின் ஊடாக சிறுபான்மை மக்களுக்கு பல சாதக விளைவுகளையும் ஜனாதிபதி பெற்றுக் கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் எதிர்பார்த்த சாதக விளைவுகள் கிடைக்கவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

நாட்டில் தெரிவான ஒவ்வொரு ஜனாதிபதியின் வெற்றிக்கு பின்னால் மலையக மக்களின் வாக்குகள் கணிசமான செல்வாக்கு செலுத்தி இருந்தன. குறிப்பாக அண்மைய ஜனாதிபதி தேர்தல் நிலவரங்களை நோக்குகையில், 2015 ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஆறாவது நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் பெற்றுக் கொண்ட வாக்குகள் 6217162 ஆகும். இவ்வாக்குகளில் மலையக மக்களின் வாக்குகள் அதிகமாக காணப்பட்டன. இதனடிப்படையில் மலையக மக்களின் கோட்டையாக விளங்கும் நுவரெலியா மாவட்டத்தில் மைத்திரி பெற்றுக் கொண்ட வாக்குகள் 272,605 ஆகவிருக்கையில், கண்டி மாவட்டத்தில் 466,994 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார். இதேவேளை மாத்தளை மாவட்டத்தில் 145,928 வாக்குகளையும், பதுளை மாவட்டத்தில் 249,524 வாக்குகளையும், இரத்தினபுரி மாவட்டத்தில் 292,514 வாக்குகளையும் மைத்திரி பெற்றுக் கொண்டார். இவ்வாக்குகள் அவரின் வெற்றிக்கு உறுதியான அடித்தளத்தினை அமைத்துக் கொடுத்தன என்றால் மிகையாகாது. மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியில் முக்கிய பங்கு தமிழ் பேசும் மக்களுக்கே உள்ளதாக ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க அப்போது சுட்டிக்காட்டி இருந்தமையும் நோக்கத்தக்கதாகும்.



எனினும் மலையக மக்கள் சார்பாக மைத்திரி பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி இருந்தபோதும் அதன் சாத்தியப்பாடுகள் குறைவாகவே காணப்பட்டன.

இதேவேளை 2019 இல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச 6,924,255 வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி ஈட்டினார். சஜித் பிரேமதாசா இத்தேர்தலில் 5,564,239 வாக்குகளையும், அனுரகுமார திசாநாயக்க 418,553 வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர். இத்தேர்தலில் மலையகத்தில் கணிசமான வாக்குகள் கிடைத்தன. இத்தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கோத்தபாய ராஜபக்சவுக்கும், தமிழ் முற்போக்கு கூட்டணி சஜித் பிரேமதாசாவுக்கும் ஆதரவளித்திருந்தது. இத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# ஆங்கில நாட்டில் மொழிச்சமவுரிமைக்கு போராடும் பூர்வீகக் குடிகள்

**பாகம் 8**

‘சூரியன் அந்திச்சாயாத நிலம் எங்களுடையது’ என பிரித்தானியப் பேரரசு முழங்கியதன் வரலாற்றுப் பின்னணியில், உலகெங்கும் ஆங்கில மொழி கடல் போல் எல்லைகளற்று, பரந்துவிரிந்து, சமூகம், அரசியல், இனக்கலவை, வரலாற்றுக் கலவை, வணிகத்தின் அடிப்படைத் தேவை என பல்வேறு முனைகளில் பெருவீச்சில் ஆக்கிரமித்துள்ளதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால், ஆங்கிலம் உருவான, ஆங்கிலத்தைத் தேசிய மொழியாகக் கொண்ட அயர்லாந்து, ஸ்காட்லாந்து, இங்கிலாந்து உள்ளடங்கிய ஐக்கியப் பேரரசில் *(United Kingdom)* ஆங்கிலத்திற்கு ஈடாக மண்ணின் மொழி அரசியல், சமூகம், கல்வி, அரச நிர்வாகம், வேலைவாய்ப்பு, உள்ளூர் தொழிற்சாலைகளில் முன்னுரிமை என்னும் முழக்கங்கள் கூர்மையடைவதையும் நாம் கவனிக்க வேண்டும்.

இதனை அறிய ஐக்கியப் பேரரசு/பிரித்தானியாவின் மொழிகளின் வரலாற்றையும் ஆங்கிலம் உருவான கதைகளையும் அறிவது அவசியம்!

### செல்டிக் மொழிப் பிரிவினர்:

மேற்கு ஆசியப்பகுதி பழங்குடிகளின் தொடர்ச்சியாகவும், மெசோபடோமியாவின் பழங்குடிகளின் வழித்தோன்றல்களாகவும் இருக்கலாம் என்ற குழப்பமான தகவல்கள் இருப்பினும் கி.மு 8 முன்பிருந்தே ஐரோப்பியாவின் பெரும் பகுதியில் வீற்றிருந்தவர்கள் செல்டிக் பழங்குடியினர்.



கி.மு 7-8ஆம் நூற்றாண்டுக் காலங்களில் ரோமானியர்கள் இவர்களை காட்டுமிராண்டிகள் என்றும் கிரேக்கர்கள் இவர்களை கடும்போர் புரியும் முரடர்கள் என்றும் வர்ணித்திருக்கிறார்கள். ஐரோப்பியாவில் முழுக்கால் சட்டை *(Pants)* அணிந்த முதல் மனிதக்கூட்டம் செல்ட்ஸ் மக்களே என்றும் வரலாறு உண்டு.

கி.மு 1 ஆம் நூற்றாண்டில், ஜீலியஸ் சீசர் தலைமையில், ரோமானியப் பேரரசை விரிவுப் படுத்திய போரில், 9 ஆண்டுகள் தொடர் போராட்டங்களின் பின்னர் செல்டிக் பிரிவினர் ஐரோப்பியப் பெருநிலப்பரப்பில் இருந்து விரட்டியடிக்கப்பட்டனர். அதேவேளை, ஜீலியஸ் சீசரால் இன்றைய பிரித்தானியத் தீவில் இருந்த செல்டிக் மக்களை வெல்ல முடியவில்லை.

ஆனால், அதன் பின்னர் ரோமானியர்கள் நடத்தியப் போரில் பிரித்தானியாவின் மேற்குக் கரைக்கு இடம்பெயர்ந்தவர்கள் வேல்ஷ் *(Welsh)* மற்றும் கார்னிஷ் *(Cornish)* பிரிவாகினர், வடக்குப் பகுதிக்கு இடம்பெயர்ந்தோர் ஸ்காட்டிஷ் *(Scottish)* ஆகினர்.

### லத்தீன், ஆங்கிலோ-சாக்சன், வைக்கிங்கஸ்:

கிட்டத்தட்ட 400 வருடங்கள் தொடர் ஆக்கிரமிப்புகளால், வேல்ஷ், கார்னிஷ் மொழிகள் மேற்குக் கரையோரப் பகுதிகளிலும் கேலிக், ஸ்காட்டிஷ் மொழிகள் வடக்குத் தீவுப்பகுதிகளிலும் பேசப்பட்டாலும், பிரித்தானியாவின் ஏனைய பகுதிகள் லத்தீன மொழிகளும் லத்தீனக் கலவைக் கொண்ட மொழியாடல்களும் உலா வரத்தொடங்கின. இதனை நமது புரிதலுக்காக, ரோமானியப் பிரித்தன் அல்லது லத்தீனப் பிரித்தன் எனக் கொள்ளலாம்.

அடுத்ததாக, ஐரோப்பியக் கண்டத்தின் பெருநிலப்பரப்பில் வெள்ளமும் குளிரும் வாட்டியெடுக்க, பிரித்தானியத் தீவில் கடும் வெயில் கொதித்தெழ பழங்கள், காய்கள் பயிரிட வேளாண்மைக்கான இடம் தேடி வந்த ஜெர்மானிய பழங்குடிப் பிரிவு, ரோமானியப் பிரித்தானியப் பகுதியில் கடும் போர் புரிந்து குடியேறுகின்றனர்.



இக்கூட்டத்திற்கு தான் ஆங்கிலோ-சாக்சன் *(Anglo-saxson)* என்று பெயர். ஸ்காட்லாந்திற்குத் தெற்கே நார்த்தம்பிரியா *(Northumbriya)*, பிரித்தானியத் தீவின் நடுப்பகுதி மெர்சி *(Mercy)*, தெற்குக் கரையோரம் சசக்ஸ் *(Sussex)*, தென்மேற்குக் கரையோரம் வெசக்ஸ் *(Wessex)*, கிழக்குக் கரையோரம் எசக்ஸ் *(Essex)*, கிழக்கு ஆங்கிலேயேப் *(East Angels)* பகுதிகள் எனப் பிரிவடைகின்றன.



முனைவர் விஜய் அசோகன்,
கல்வியாளர்

அதனைத் தொடர்ந்து நோர்வே, சுவீடன், டென்மார்க் நாடுகளைச் சார்ந்தக் கடல்-நாடோடிகளான வைக்கிங்கிஸ் *(Vikings)*, கிட்டத்தட்ட 2 லட்சம் பேர், அயர்லாந்து, ஸ்காட்லாந்து, ஐசுலாந்து, பிரித்தானியாவின் பெரும் பகுதிகளுக்கும் புலம்பெயர்கின்றனர்.

### மொழிகளின் கலவையும் சமூகக்கூட்டும்:

8ஆம் நூற்றாண்டில் வைக்கிங்க்ஸ் வந்த பின்னர், வெசக்ஸ் மன்னர் ஆல்பிரடிற்கும் டேனீஷ் மன்னர் குர்தாமிற்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டு, ஆங்கிலோ-சாக்சன் பகுதிக்குள், டென்மார்க் பகுதி ஒன்று உருவானது. இருப்பிரிவினரின் மொழிகளின் தோற்றம் இந்தோ-ஐரோப்பியக் குடும்பத்தின் பண்டைய ஜெர்மானியக் கலவை என்பதால், மொழித்தடையின்மையால், சமூக ஒற்றுமைக்கும், திருமண உறவுகளுக்கும் வாய்ப்புகள் அதிகமாகின. இருப்பினும், போர் மூண்டு மீண்டும் டேனீஷ் கட்டுப்பாட்டிலும், அடுத்தடுத்தப் போர்களின் வழியே கி.பி. 1042இல் மீண்டும் ஆங்கிலோ-சாக்சன் எட்வார்ட் அவர்களின் தலைமையில் இங்கிலாந்து முழுமைக்கும் தங்கள் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்தனர்.

அதன்பின்பும் இரு பிரிவு மக்களின் மொழிக் கலவைகளும் சமூகக்கூட்டினால், பண்பாட்டு மாற்றம் எனத் தொடர்ந்து வேல்ஷ், கார்ன்வெல் பகுதிக்கு அப்பாலான இங்கிலாந்தின் பெருநிலப்பரப்பில் புதிய மொழி ஒன்று பிறக்கிறது.

அதாவது, பழங்கால இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் இருந்து உருவான ஜெர்மானிய மொழியின் வட ஜெர்மானிய மொழிப் பிரிவில் இருந்து ஸ்காண்டிநேவியன் மொழிகள் உருவானது. ஜெர்மானியத்தின் மேற்குப் பிரிவின் மொழியில் இருந்து பிறந்து வந்த ஆங்கிலோ-சாக்சன் மக்களின் மொழி மாற்றமும் வைக்கிங்க்ஸ் மக்களோட இணைந்து உருவானதுதான் பழைய ஆங்கிலம்.

### ஆங்கிலோ-நோர்மென் — ஆங்கிலக் கலவை:

அதன் பின்பு, நோர்வே வைக்கிங்க் பழங்குடிப் பிரிவினர் மேற்கு ஃபிரன்சு பிரிவினர், ரோமானியக் கேலியப் பிரிவினர் ஆகியோர் கலவையில் உருவான நோர்மென் பிரிவினர் பிரித்தானியாவிற்கு வருகிறார்கள்.



ஃபிரன்சு மொழி ஆதிக்கமும் லத்தீன மொழி ஆதிக்கமும் ஊடுருவி கலவையான ஆங்கிலமாக கி.பி. 1300களின் பின்பு மாற்றம் காண்கிறது. கி.பி. 1400-1600களில் ஆங்கிலம் இவையெல்லாவற்றிலும் இருந்து புது வடிவம் பெறுகிறது.

### ஐக்கிய முடியாட்சி (அரசாட்சி) - *United Kingdom* மற்றும் சுதந்திரப் போர்கள்:

ஆங்கிலோ-சாக்சன் நிலங்கள், வேல்ஷ், கார்னிஷ், ஸ்காடிஷ், அயர்லாந்து ஆகியவைகளின் கூட்டாக ஐக்கிய அரசாட்சி *(United Kingdom)* உருவான பின், எங்கும் ஆங்கிலம் எதிலும் ஆங்கிலமாக மாறின எனலாம்.

ஐரீஷ் இனத்தின் தனித்த பண்பாட்டினைப் பாதுக்காக்க 16ஆம் நூற்றாண்டில் எழுந்த போர்க்குரலில் உருவான ஐரீஷ் தேசிய உணர்வெழுச்சியால், 1922இல் இன்றைய வட அயர்லாந்து நிலங்களைத் தவிர்த்த ஏனையப் பகுதிகள் சுதந்திர அயர்லாந்தாக மாறின.

1707இல் ஸ்காட்லாந்து பிரித்தானியாவுடன் இணைக்கப்பட்டப் பின், 1872 கல்விச்சட்டம், ‘ஆங்கிலம் ஒன்றே கல்வி மொழி’ என கட்டாயப்படுத்தின. மொழிச் சுதந்திரத்திற்காகத் தொடங்கப்பட்டப் போராட்டம் தான் ஸ்காட்லாந்தின் தேசிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டது.

### இன்றும் தொடரும் மொழிகளுக்கான உரிமைக்குரல்:

ஐரீஷ் மொழியினையும் பண்பாட்டையும் தாங்கிப் பிடித்தப் போர்க்குரலில் சுதந்திர அயர்லாந்து உருவானது. ஸ்காட்டீஷ், கேலிக் மொழிகளுக்கான நில உரிமைக்கான போராட்டம், தனி நாடு போராட்டமாகி, இன்று ஐக்கிய அரசாட்சிக்குள் இருக்கும் ஒரு நாடாக மாறி பல்வேறு சுயாட்சி அதிகாரம் பெற்றிருப்பினும், முழுமையான

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இடம் பெற்றது போன்ற ஒரு மக்கள் போராட்டத்தினை எதிர்கொள்ள முடியாது பங்களதேசத்தின் பிரதமர் ஷேக் ஹசீனா உலங்குவானூர்தி மூலம் நாட்டைவிட்டு தப்பிச் சென்றுள்ளார். முன்னாள் இலங்கை அதிபர் கோத்தபயா ரஜபக்சாவுக்கு இறுதி நேரத்தில் படையினர் வழங்கிய 45 நிமிட நேர கால அவகாசமே ஹசீனாவுக்கும் வழங்கப்பட்டது.



நடவடிக்கை மூலம் உருவாக்கியிருந்தது. ஆனால் தேர்தல் தொடர்பில் அமெரிக்கா தெரிவித்துவரும் கருத்துக்கள் சீனாவுடனான பங்களாதேசத்தின் நெருக்கம் என்பன இந்தியாவுக்கு சங்கடம் தரும் விடையமாகும்.

இந்தியாவுக்கும் பங்களாதேசத்திற்கும் இடையிலான உறவுகள் சுதந்திரத்தின் பின்னர் ஹசீனாவின் தந்தையாரின் காலத்தில்

# ஒவ்வொன்றாக வீழ்த்தப்படும் இந்தியாவின் நண்பர்கள்

வேல்ஸில் இருந்து **அருஸ்**

ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமரின் இல்லத்தை உடைத்துக்கொண்டு உள்ளே சென்ற சமயம் ஹசீனா தனது சகோதரியுடன் பின்பக்க வாசல் வழியாக தனது பிரத்தியோக காரில் தப்பிச் செல்ல அவருக்கு பாதுகாப்பாக பஜீரோ வாகனத்தில் சிறப்பு படையினர் சென்று அவசரமாக வரவழைக்கப்பட்ட வான்படை உலங்குவானூர்தி மூலம் இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்தார். தப்பிச் செல்லும் முன்னர் அவர் தனது பதவியையும் துறந்திருந்தார்.



2022 ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து தப்பியோடிய கோத்தபாயாவும் இந்தியாவின் நண்பன் என்றபோதும் தமிழ் மக்களின் பிரச்சனை காரணமாக அவரை மாலைதீவு வழியாக தப்பிச் செல்ல கூறியிருந்தது இந்தியா. ஆனால் தனது நீண்டகால நண்பியான ஹசினாவின் உலங்குவானூர்தியை புதுடில்லியில் உள்ள தனது ஹின்டொன் வான்படைத்தளத்தில் தரையிறங்க இந்தியா அனுமதித்திருந்தது.

கடந்த மூன்று வாரங்களாக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை பங்களாதேசத்தின் படையினரும் காவல்துறையினரும் கடுமையாக அடக்க முறப்பட்டிருந்தனர். போராட்டக்காரர்களினால் 20 மாவட்டங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை(4) மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களில் ஒரு நாளில் மட்டும் 93 பொதுமக்களும் 14 காவல்துறையினரும் கொல்லப்பட்டிருந்தனர். மொத்தமாக இறந்தவர்களின் எண்ணிக்கை என்பது பல நூறு என தெரிவிக்கப்படுகின்றது. ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். பல ஆயிரக்கணகாகனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அங்கு இடம்பெறும் வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் திங்கட்கிழமை(5) தலைநகர் டாக்கா நோக்கி செல்லும் ஊர்வலத்தில் அதிக வன்முறைகள் இடம்பெறலாம் எனவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் வொல்கர் ரேக் தெரிவித்திருந்தர்.



அரச பணியாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு 1971 ஆம் ஆண்டு சுதந்திரப் போரட்டங்களில் ஈடுபட்டவர்களின் உறவினர்களுக்கு அதிகளவான முன்னுரிமை ஒதுக்கப்பட்டதே இந்த போரட்டத்திற்குகாரணமாக கூறப்படுகின்றபோதும், கடந்த 15 வருடங்களாக ஆட்சியில் இருக்கும் 76 வயதான ஹசீனா கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற தேர்தலிலும் முன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது எதிர்த்தரப்பையும், பூகோள அரசியல் போட்டிகளின் பங்காளிகளையும் கடும் சினமடைய வைத்திருந்தது.

இந்த தேர்தலை எதிர்க்கட்சிகள் புறக்கணித்ததால் 40 விகித மக்களே வாக்களித்திருந்தனர். 300 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமனத்தில் 224 ஆசனங்களை ஹசினாவின் அவாமி லீக் கட்சி பெற்றிருந்தது. எதிர்க்கட்சி 11 ஆசனங்களையும், சுயேட்சை வேட்பாளர்கள் 65 ஆசனங்களையும் பெற்றிருந்தனர்.

இந்த தேர்தல் முடிவுகளை இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் உடனடியாக ஆதரித்தாலும் அமெரிக்கா உட்பட மேற்குலகம் விரும்பவில்லை. தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் இந்தியாவின் உதவியினால் தான் தாம் வெற்றிபெற்றதாக ஹசீனா தெரிவித்திருந்தார். அவருக்கு வாழ்த்து தெரிவித்த தலைவர்களில் இந்தியப் பிரதமர் முதன்மையானவர். பங்களாதேசம் தனது கேந்திர முக்கியத்துவம் மிக்க நாடு என்பதை இந்தியா உணர்ந்திருந்தது. எனவே தான் அதனை படை

வலுவாக இருந்தது. அதன் பின்னர் இராணுவம் பங்களாதேசத்தின் ஆட்சியை கைப்பற்றியதும் 1970 களில் இந்தியாவுடனான பங்களாதேசத்தின் உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டிருந்தன. எனினும் ஹசீனா பதவியேற்றதும் இந்தியாவுடனான உறவுகள் மீண்டும் பலமடைந்திருந்தன.

இந்தியா பங்களாதேசத்துடன் பல பொருளாதார பாதுகாப்பு உடன்பாடுகளை மேற்கொண்டிருந்தது. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்பாடு மற்றும் சார்க் நாடுகளின் வர்த்தக உடன்பாடு என்பன அவற்றில் சில. பங்களாதேசத்தின் பொருட்களுக்கும் இந்தியா வரிவிலக்கு அளித்திருந்தது.

இரு நாடுகளும் 54 நதிகளை பகிர்ந்து வருவதுடன், 4,096 கி.மீ எல்லையையும் கொண்டுள்ளன. இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் 2022 ஆம் ஆண்டு 18 பில்லியனாக அதிகரித்திருந்தது. 2010 ஆம் ஆண்டில் இருந்து 7 பில்லியன் டொலர்களை இந்தியா கடனாக வழங்கியிருந்தது. இந்தியா-மியான்மார்-தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கிடையிலான 1,400 கி.மீ துர வர்த்தக பாதையில் இணையவும் பங்களாதேசம் விருப்பம் தெரிவித்திருந்தது.



பங்களாதேசத்தின் பொருளாதார வளர்ச்சி என்பது இந்தியாவை விட அதிகமாகும் அதாவது அதன் இந்த வருடத்தின் வளர்ச்சி 6.5 விகிதம் என கணிக்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு கையிருப்பும் 48 பில்லியன்களை 2021 ஆம் ஆண்டு எட்டியிருந்தது. அதன் ஏற்றுமதி 2022 ஆம் ஆண்டு 59 பில்லியன்களாக அதிகரித்திருந்தது. பொருளாதாரத்தில் தெனஆசியாவில் மிகவேகமாக வளர்ந்துவரும் நாடு அது என்பதுடன் அதன் பொருளாதார பலமும் வலிமையானது.

இலங்கையை போல் அல்லாது

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# இஸ்மாயில் ஹனியே படுகொலையும் மத்தியகிழக்கை மீண்டும் மையம் கொள்ளும் உலக அரசியலும்

பாகம் 2

அனைத்திற்கும் மேலாக அதுவரை இஸ்ரேல் - பலஸ்தீன யுத்தமாக இருந்த அது மத்திய கிழக்கின் பிராந்திய யுத்தமாக மாறத்தொடங்கியது. ஏமன் ஹூதிகள் கப்பல்கள் மீது தொடுத்த ஏவுகணை ட்ரான் தாக்குதல்களால் இஸ்ரேலுக்கு சரக்கேற்றிவரும் கடல் வழிப்பாதை முடக்கப்பட்டு அதன் பிரதான ஈயாட் (Eiat Port) துறைமுகம் திவாலடைந்தது. ஹூதிகளின் தாக்குதலுக்கு அஞ்சி அமெரிக்க விமானம் தாங்கி போர்க்கப்பலான டுவைட் டி. ஐசன்ஹோவர்(Dwight D. Eisenhower) மத்திய கிழக்கில் இருந்து 2024 ஜூன் மாதம் பின்வாங்கியது. லெபனான் - ஹிஸ்புல்லா மற்றும் சிரியா இராக் போன்ற நாடுகளில் உள்ள -நவீன ஆயுதங்கள் கொண்ட - ஈரான் ஆதரவு ஆயுத குழுக்கள் இஸ்ரேலுக் கெதிராக அணிதிரண்டன.



அனைத்துக்கும் மேலாக ஈரான் விரைவில் அணுகுண்டை தயாரித்துவிடும் என்ற பீதி அதிகரித்தது. பல முக்கிய ஈரான் விஞ்ஞானிகளை துல்லியமாக தாக்கியழித்தும், அணுகுண்டை தயாரிக்கவிடாமல் தடுப்பதற்கு அனைத்து சதி நாசகார முயற்சிகளை மேற்கொண்டும் தடுக்க முடியாமல் போனதையிட்டு இஸ்ரேல் கவலை கொண்டது.

இத்தகைய பின்னணியில் இஸ்ரேல் தனது பின்னடைவை சரிசெய்வதற்கு அவசரமாக ஏதாவது செய்யவேண்டியிருந்தது. அதில் ஒன்று தான் இஸ்மாயில் ஹனியே மீதான தாக்குதலாகும்.

### அமெரிக்காவுக்கு ஏற்பட்டுவரும் தொடர்ச்சியான பின்னடைவுகள்

ஆகஸ்ட் 2021 இல், அமெரிக்கா தனது கடைசி துருப்புக்களை ஆப்கானிஸ்தானில் இருந்து ஏறக் குறைய 20 ஆண்டுகளுக்குப் பிறகு விலக்கிக் கொண்டதில் இருந்து அதன் சர்வதேச செல்வாக்கு பெருத்த அடி வாங்கியது. அமெரிக்காவில் அப்போது மேற்கொள்ளப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பின்படி 69% அமெரிக்கர் ஆப்கானிஸ்தானில் தனது இலக்குகளை அடைவதில் அமெரிக்கா தோல்வியடைந்ததாகக் கூறினர். 1977 வியத்நாம் போர் தோல்வியின் பின்னர் அமெரிக்கா சந்தித்த மிகப்பெரிய தோல்வி இதுவாகும். இதனால் ஈராக் மீதும் லிபியா மீதும் அமெரிக்கா தொடுத்த ‘ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான’ போர்களின் பெறுபேறு பற்றியும் கேள்விகள் வலுப்பெற்றன.



உக்ரைன் ரஷ்ய போர்,நோர்ட் ஸ்ட்ரீம் கடலடி குழாய் தகர்ப்பு, ரஷ்யா மீது போடப்பட்ட பொருளாதாரத் தடைகள், போன்ற அமெரிக்காவின் நடவடிக்கைகள் உலக பொருளாதாரத்தை ஆட்டம் காண வைத்தன. மேற்குநாடுகளில் தீவிர வலதுசாரி அரசியல் கட்சிகள் பலம் பெறத்தொடங்கின. நீடித்த உக்ரைன் ரஷ்ய போர் மூன்றாம் உலகப்போராக வெடிக்கும் அபாயம் அதிகரித்தது.



பி. ஏ. காதர்

பொருளாதர ரீதியில் அமெரிக்காவுக்கு அடுத்த நிலையில் வேகமாக வளர்த்து வரும் சீனாவை தனக்கொரு அச்சுறுத்தலாக கருதும் அமெரிக்கா அதன்மீதும் பொருளாதாரத் தடைகளை விதிக்கத்தொடங்கியமை மூன்று எதிர் விளைவுகளை ஏற்படுத்தின. ஒன்று, அமெரிக்கா தன்னைவிட எந்தநாடும் பொருளாதாரரீதியில் வளர்வதை சகித்துக்கொள்ளாது என்பதை ஏனைய நாடுகள் உணரத்தொடங்கின. இரண்டு, சீனாவும் ரஸ்யாவும் அமெரிக்காவின் தடையைமீறி நெருங்கிய வர்த்தக- இராணுவ நட்புநாடுகளாக மாறின. மூன்று, வளர்ந்துவரும் நாடுகள் மத்தியில் அமெரிக்கா மேலாதிக்கத்தின் கீழ் இருந்து விடுபடவிரும்பும் போக்கு அதிகரித்து பிரிக்ஸ் (BRICS) நாடுகளின் கூட்டு விரிவடையவும் பலம்பெறவும் தொடங்கியது. அமெரிக்க டாலரின் ஆதிக்கத்தை முடிவுக்கொண்டுவர அவை ஓரணி திரள்கின்றன. சவூதி அரேபியா அமெரிக்க டாலரில் மாத்திரமே தனது பெற்றோலிய பொருட்களை ஏனைய நாடுகளுக்கு விற்கவேண்டும் என்ற 50 வருட உடன்படிக்கை09.06.2024ல்காலவதியானதை அடுத்து அவ்வொப்பந்தத்தை புதுப்பிக்க மறுத்து அமெரிக்காவை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இது அமெரிக்க டொலர் ஆதிக்கத்துக்குக் கிடைத்த பலத்த அடியாகும்.



மறுபுறத்தில் அமெரிக்காவின் பொருளாதாரத் தடையால் - எண்ணெய் வளம் இருந்தும்- பின்தங்கியிருந்த ஈரான் தனது உறவை ரஸ்யாவுடனும் சீனாவுடனும் வளர்த்துக்கொண்டு வேகமாக இராணுவரீதியில் முன்னேறுகிறது. அதுவரை ஷியா முஸ்லீம் - ஈரானுக்கும் சவுதியை மையமாகக்கொண்ட சுன்னி முஸ்லீம் நாடுகளுக்குமிடையே நிலவிய முரண்பாட்டை பயன்படுத்தி தனது பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் அவற்றின் வளங்களை மலிவான விலையில் கவர்ந்து சென்ற அமெரிக்காவுக்கு மற்றொமொரு பலத்த அடி காத்திருந்தது. சீனாவின் இராஜதந்திர முயற்சியால் ஈரானும் சவுதி அரேபியாவும் நண்பர்களாயினர். அதுவரை சவுதியின் பாதுகாப்பை அமெரிக்கா குத்தகை எடுத்திருந்தது, அப்பொறுப்பை சீனா இப்போது எடுத்துக்கொண்டது. இதனால் அதுவரை உலகிலே அமெரிக்காவிடமிருந்து பெருமளவு ஆயுதங்கள் வாங்கும் நாடாக இருந்த சவுதியை அமெரிக்கா விரைவில் இழக்கவேண்டிய ஆபத்து உருவாகியுள்ளது.

மறுபுறத்தில் ஈரான் ரஸ்யாவுடன் 20 வருட இராணுவ, பொருளாதார உடபடிக்கை ஒன்றுக்கு தயாராகி வருகிறது. அனைத்துக்கும் மேலாக முன்னர் ஒருதடவை சோவியத் யூனியன் கியூபாவில் தனது ஏவுகணைத்தளத்தை நிறுவ முயன்றபோது அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜோன் எப் கென்னடி அதனைத் தடுத்து நிறுத்தினார். அப்போது மூன்றாம் உலக மகாயுத்தத்தின் விளிம்புக்கு உலகம் சென்றது. இது ‘கியூபா ஏவுகணை நெருக்கடி’ Cuban Missile Crisis (16 முதல் 28 அக்டோபர் 1962) எனப்படுகிறது. ஆனால் ஜூன்- ஜூலை 2024ல் ரஷ்யாவின் அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கி கப்பலான கசான் (Kazan) பல போர்க்கப்பல்களின் பாதுகாப்புடனும் கியூபாவுக்கும் அடுத்து வெனின்சுலாவுக்கும் தடையின்றி சென்றது.



அனைத்துக்கும் மேலாக அமெரிக்காவின் உள்நாட்டு-வெளிநாட்டு கொள்கை காரணமாக இன்று உலகில் முதலாவது கடன்கார நாடாக அமெரிக்கா மாறிவருகிறது. உலக வங்கியின் அறிக்கைப்படி கடந்த மே மாதமளவில் அமெரிக்காவின் கடன் $34 டிரில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. தேசியக் கடன் தற்போது முழு அமெரிக்கப் பொருளாதாரத்தின் அளவை, ($27.3 டிரில்லியன் டாலர்கள) தாண்டிவிட்டது. உடனடியாக தடுக்கப்படாவிட்டால் இது ஒரு பனிப்பந்து (snowball ) நெருக்கடி நிலைக்கு நாட்டை கொண்டுசெல்லும் என உலக வங்கி எச்சரித்துள்ளது (பார்க்க:https://fortune.com/2024/05/01/the-debt-is-big-as-its-own-economy-still-no-plan/).

ஆகவே முன்னரைப்போல் அமெரிக்காவால் தனி ஒரு வல்லரசாக இனியும் செயல் படமுடியாது.

### அடுத்து என்ன?

இப்போது புலி வாலைப்பிடித்த நிலையில் அமெரிக்கா இருக்கிறது. இன்றைய நிலையில் தனது தத்துப்பிள்ளையான இஸ்ரேலை கைவிட்டால் உலக அரங்கில்எந்த நாடும் அமெரிக்காவை மதிக்கப்போவதில்லை என்பதை அமெரிக்கா அறிந்தே வைத்துள்ளது. அத்துடன் மத்தியகிழக்கில் இஸ்ரேல் பலவீனமடைந்தால் ஈரானிதும், ரஷ்ய-சீன முகாம்களினதும் கை ஓங்கிவிடும் என்பது அதற்குத்தெரியும். இஸ்மாயில் ஹனியேவை ஈரானில் வைத்து இப்படி கொலை செய்யும் திட்டம் நெதன்யாகுவிடம் இருப்பது அமெரிக்காவுக்குத் தெரியாது என்றே கருத வேண்டியுள்ளது. ஏனெனில் அமெரிக்காவை எப்படியாவது இப்போரில் இழுத்துவிடவேண்டும் என நெதன்யாகு முயல்வது அமெரிக்காவுக்கு நன்கு தெரியும். அமெரிக்கா சென்று திரும்பியது முதல் அவரது நரித்தனம் அதிகரித்திருப்பது இதற்கான முயற்சியே என பல அவதானிகள்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# பிரித்தானியாவில் என்ன நடக்கின்றது?

## ஆசிய மக்களுக்கும் ஆபத்து

தமிழில்: பிரபா

பிரித்தானியாவில் எதிர்பாராமல் ஏற்பட்ட கலவரம் தொடர்பில் அவதானிகள் குழப்பம் அடைந்துள்ளனர். குடியேற்றக்காரரர்கள், இணையத்தள வன்முறைகள், தவறான தகவல்கள், மிதவாதம், காவல் துறையின் தவறான கணிப்புக்கள், மிதமான வெப்பமுள்ள காலநிலை என்பன தான் இந்த கலவரத்தை அதிகப்படுத்தி வருகின்றதா என்ற குழப்பம்.

ஏழாவது நாளாக கலவரம் பிரித்தானியா முழுவதும் விரிவடைந்துள்ளது. பிரித்தானியாவின் சவுத்போட் பகுதியில் விடுமுறைகளை மக்கள் கொண்டாடும் *Taylor Swift-themed holiday club* இடத்தில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் 3 சிறுமிகள் இறந்ததை தொடர்ந்து இந்த கலவரம் ஏற்பட்டிருந்தது.




இந்த தாக்குதலை மேற்கொண்டவர் 17 வயதான அலக்ஸ் முகன்வா ருடகுபானா என்ற சிறுவன். வேல்ஸ் மாநிலத்தின் கார்டிப் நகரத்தில் பிறந்த அவரின் பூர்வீகம் றுவான்டாவாகும். அவர் கிறிஸ்த்தவ மதத்தைச் சேர்ந்தவர்.

இந்த தாக்குதல் ஒரு பயங்கரவாதத் தாக்குதல் எனவும் அது சட்டவிரோதமாக படகில் வந்த முஸ்லீம் குடியேற்றவாசி ஒருவரால் மேற்கொள்ளப்பட்டதாக தவறான செய்திகள் சமூகவலைத்தளங்களில் உடனடியாகவே பகிரப்பட்டிருந்தன.

இந்த தகவலைத் தொடர்ந்து றொதெஹம், ரம்வேர்த், மன்செஸ்ரர், ஹல், லிவப்பூல், பிறிஸ்ரல், பிளைமத், பெர்மிங்கம் மற்றும் வடஅயர்லாந்தின் தலைநகர் பெல்பாஸ்ட் ஆகிய இடங்களில் காவல்துறையினருக்கும் கலவரக்காரர்களுக்கும் இடையில் மோதல்கள் ஆரம்பமாகியிருந்தன.

இந்த கலவரங்களைத் தொடர்ந்து பிரித்தானியாவின் கொப்ரா எனப்படும் அவசர பாதுகாப்பு மாநாடு கூட்டப்பட்டிருந்தது. குற்றவியல் சட்டங்களை மூலம் மிதவாத வலதுசாரிகளை(-*Far-right)* ஒடுக்கப்போவதாக பிரதமர் கியர் ஸ்ராமர் தெரிவித்திருந்தார்.

இதுவரையில் 400 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. முஸ்லீம் மற்றும் ஆசிய இனத்தவர்கள் உட்பட சிறுபான்மை மக்கள் மீது தாக்குதல் நடத்தும் பிரித்தானியாவை பூர்வீகமாகக் கொண்ட வலதுசாரிகள் குடியேற்றவாசிகள் தங்கியிருந்த இரண்டு கொலிடே இன் எனப்படும் ஆடம்பர விடுதிகளையும் தாக்கியிருந்தனர். பள்ளிவாசல்களையும் விடவில்லை.

இந்த தாக்குதல்களை தொடர்ந்து குடியேற்றவாசிகளை கையாளும் அலுவலகங்கள் பல அவசரமாக முடப்பட்டுள்ளன. சில இடங்களில்



காவல்துறையினரின் வாகனங்கள் மற்றும் காவல் நிலையங்களும் தாக்கப்பட்டிருந்தன.

முஸ்லீம்களுக்கு எதிராக தோன்றிய இந்த கலவரங்களில் சிறுபான்மை மக்களின் வீடுகள், கடைகள், வாகனங்கள் என்பன தாக்கப்பட்டன. முஸ்லீம்களுக்கும் ஏனைய ஆசிய ஆபிரிக்க நாட்டவர்களுக்குமான வேறுபாடுகளை வன்முறையாளர்கள் பெருமளவில் அறியாதவர்கள் ஆகையால் அவர்களின் தாக்குதலில் இலங்கை, இந்தியா, பங்களாதேசம் உட்பட பல ஆசிய நாட்டவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இடம்பெறும் தாக்குதல்களை வெறுப்பு வன்முறை என தெரிவித்துவருகின்றது பிரித்தானியா அரசு, இந்த வன்முறைகளை ஆசிய, அரபு அல்லது ஆபிரிக்க நாட்டவர்கள் மேற்கொண்டிருந்தால் அதனை பயங்கரவாதம் என பிரித்தானியா அதிகாரிகள் கூறியிருப்பார்கள் என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் தற்போது இந்த வன்முறைகள் வெறுப்பு வன்முறையில் இருந்து விலகி பயங்கரவாதத்தை நெருக்கியுள்ளதாக பயங்கரவாதத்திற்கு எதிரான காவல்த்துறை பிரிவின் தலைவர் நீல் பாசு தெரிவித்துள்ளார்.

ஆனால் பிரித்தானியாவின் இறைமையை தக்கவைப்பதற்கும் அதன் பெருமையை காப்பதற்கும் வன்முறையாளர்கள் விரும்புவதாக முன்னாள் காவல்த்துறை ஆணையாளரும், கொன்சவெட்டிவ் கட்சியின் அரசியல்வாதியுமான டொனா ஜோன்ஸ் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது.




வன்முறையாளர்களை கட்டுப்படுத்துவதால் பிரச்சனை தீராது. குடியேற்றவாசிகளின் வரவை கட்டுப்படுத்தும் தகைமையை பிரித்தானியா இழந்துவிட்டது அது தான் தற்போதைய பிரச்சினை.

குடியேற்றவாசிகளை கட்டுப்படுத்தாது வன்முறை யாளர்களை அடக்குவது ஸ்ரமர் அரசுக்கு பாத கமாக அமையும் என பாதுகாப்பு ஆய்வாளர் வில் ஜெடேஸ் தெரிவித்துள்ளார்.

சவுத்போட்டில் இடம்பெற்ற கொலை தொடர்பில் காவல்துறையினர் தெளிவான தகவல்களை மக்களுக்கு தெரிவிக்காததும் இந்த வன்முறைக்கான காரணம். தரிப்பிடத்தை விட்டு புகையிரதம் வெளிக்கிட்ட பின்னர் தான் அதனை நிறுத்த முற்படுகின்றனர்.

சிறுமிகளைக் கொன்றவர் பிரித்தானியாவில் பிறந்தவர், சட்டவிரோத குடியேற்றவாசி அல்ல, அவர் முஸ்லீம் அல்ல, பயங்கரவாதி அல்ல என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த கலவரங்களைத் தூண்டும் சமூகவலைப் பதிவுகள் சில வெளிநாடுகளில் இருந்து பரப்பப்படுகின்றன. அதாவது சீனா மற்றும் ரஸ்யா ஆகிய நாடுகள் அவை என ஜெடேஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் சில தரப்பு அதனை இஸ்ரேல் மேற்கொண்டதாக தெரிவித்துள்ளன. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகு மற்றும் பாதுகாப்பு அமைச்சர் கலன் ஆகியோர் மீது அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் கொண்டு வந்த பிடியாணைக்கு எதிராக பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் ரிசி சுனாக் மேற்கொண்ட வழக்கை புதிய ஸ்ரமர் அரசு கைவிடக்கூடாது என



அமெரிக்கா தெரிவித்திருந்தது.

ஆனால் ஸ்ரமர் அரசு அதில் இருந்து விலகியிருந்தது. மேலும் இஸ்ரேல் மீது ஆயுதத்தடையை கொண்டுவரவும் அது திட்டமிட்டதே இஸ்ரேலின் கோபத்திற்கு காரணம் என அவை தெரிவித்துள்ளன. எனினும் இந்த கலவரங்களில் வெளிநாடுகளின் தொடர்புகள் குறித்து தேசிய குற்றவியல் நிறுவனம் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றது.

அதேசமயம் பிரித்தானியா பிரதமர் இந்த கலவரத்தை தணிப்பதை விட அதனை அதிகரிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டுவருவதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் இந்த வன்முறைகள் தவறான தகவல்களால், திரிபுபடுத்தப்பட்ட தகவல்களால்,

தொடர்ச்சி 19ஆம் பக்கம்



# ஷேக் ஹஸீனா இழைத்த முக்கிய தவறு என்ன?

தமிழில்: ஜெயந்திரன்

ஒரேயொரு சொல்லிலிருந்து தான் எல்லாமே தொடங்கியது- “றஸகார்” வங்காளதேசத்தைப் பொறுத்த வரையில், “றஸகார்” விரும்பத்தகாத ஒரு சொல். உண்மையில் இந்தச் சொல்லின் பொருள் ‘தன்னார்வத்தொண்டர்’ என்பதாகும். ஆனால், 1971 ஆம் ஆண்டில் நடைபெற்ற வங்காளதேசத்தின் சுதந்திரப் போரை அடக்குவதற்கு, பாகிஸ்தான் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைக்கு ஆதரவளித்தவர்களையே இந்தச் சொல் சுட்டிக் காட்டுவது மட்டுமன்றி, இவ்வாறானவர்கள் மிகவும் கொடூரமான அட்டூழியங்களை இழைத்ததாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றனர்.



நாடு முழுவதும் மிகவும் பரவலாக நடைபெற்ற கலவரங்களைத் தொடர்ந்து, தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு, ஒரு இராணுவ உலங்கு வானூர்தியில் நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றிருக்கும் எழுபத்தாறு வயது நிரம்பிய பிரதமர் ஷேக் ஹஸீனா, தான் ஆட்சி செய்த 15 வருட காலத்தில் தனது அரசியல் எதிரிகளைத் தண்டிப்பதற்காக இந்தச் சொல்லையே பயன்படுத்தினார்.

வங்காள தேசத்தின் தாபகரும், அதன் மேனாள் அதிபருமான ஷேக் முஜிபுர் ரஹ்மானின் மகளானஷேக்ஹஸீனா, 1990ம்ஆண்டில், இராணுவ ஆட்சியை முன்னெடுத்தவரும் அப்போதைய அதிபருமாக விளங்கிய ஹொஸெய்ன் மொஹமட் எர்ஷாட்டின் பதவியைக் கவிழ்த்த சனநாயக ஆதரவு கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியிருந்தார்.



1996ம் ஆண்டு, நடைபெற்ற தேர்தலில், அவரது கட்சியான அவாமி லீக் கட்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, ஷேக் ஹஸீனா வங்காளதேசத்தின் பிரதமராக முதல் தடவையாகப் பதவியேற்றார். 2009ம் ஆண்டு, மீண்டும் பதவிக்கு வந்த ஷேக் ஹஸீனா மிகவும் குறிப்பிடத்தக்க பொருண்மிய வளர்ச்சியை நாட்டில் தோற்றுவித்தார். ஆனால் அதனைத் தொடர்ந்து சர்வாதிகாரத் தன்மையை நோக்கி அவர் நகரத் தொடங்கினார். 170 மில்லியன் சனத்தொகையைக் கொண்டதும், சனத்தொகையைப் பொறுத் தவரையில் உலகின் 8வது இடத்தில் இருக் கும் வங்காளதேசத்தில், பேச்சுச் சுதந்திரம், மாற்றுக்கருத்து, எதிர்ப்பு போன்றவற்றில் ஈடு பட்டவர்களை மிகவும் கடுமையாக அடக்க ஷேக் ஹஸீனா முற்பட்டார்.

வங்காளதேசத்தை நீண்ட காலம் ஆட்சி செய்த பெண் பிரதமரான ஷேக் ஹஸீனா, பாதுகாப்புப் படையினரை இன்னும் குறிப்பாக மிக மோசமான *Rapid Action Battalion Paramilitary* அதிகமாகப் பயன்படுத்திய ஒரு பிரதமராகப் பார்க்கப்படுகிறார். எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களையும், மாற்றுக்கருத்தையுடையவர்களையும் கடத்தவும், கொல்லவும், மேற்குறிப்பிட்ட படையை ஷேக் ஹஸீனா பயன்படுத்தியதான குற்றச்சாட்டுகள் அவர்மேல் சுமத்தப்பட்டிருக்கின்றன. இதுமட்டுமன்றி, தேர்தல் முடிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தவும் மேற்குறிப்பிட்ட படையை அவர் பயன்படுத்தியிருக்கிறார்.



வங்காள தேசத்தில் நடுநிலைமையாகச் செயற்பட்டுவந்த நீதிபரிபாலன அமைப்பும் ஷேக் ஹஸீனாவின் ஆட்சிக்காலத்தில் தனது நடுநிலைமையை இழக்கத் தொடங்கியது. ஒரு வழக்கில் பிரதமருக்கு எதிரான தீர்ப்பை வழங்கிய பிரதம நீதியரசர் நாட்டை விட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

அதுமட்டுமன்றி, வங்காளதேசத்தின் முக்கிய ஊடகங்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ஷேக் ஹஸீனா, தனது எதிரிகளை இலக்குவைக்க இவ்வாறான ஊடகங்களைப் பயன்படுத்தினார். வங்காள தேசத்தின் முக்கிய ஊடகங்கள் அனைத்தும் அவாமி லீக் கட்சியுடன் தொடர்பானவர்களுக்கு சொந்தமானவையாகும்.

ஊடகங்களை ஷேக் ஹஸீனா தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததன் காரணமாக, நாட்டின் சுதந்திரத்துக்கும் அதன் சாதனைகளுக்கும் தனது ஆதரவாளர்களே உரிய வாரிசுகள் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியதுடன், மாற்றுக் கருத்துகளைக் கொண்டவர்களையும் வங்காள தேசத் தேசியக் கட்சி, வங்காள தேச இஸ்லாமியப் பேரவை போன்ற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் துரோகிகளாகவும் தீவிரவாதிகளாகவும் சித்தரித்தார்.

வங்காள தேசத்தின் முன்னாள் பிரதமராகப் பதவி வகித்த பேகம் காலிதா ஸியா ஊழல் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்ட அதே வேளை, வங்காள தேச இஸ்லாமிய பேரவையைச் சேர்ந்த ஒரு முக்கிய பிரமுகருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.




வேலை வாய்ப்புகளை வழங்குவது தொடர்பாக வங்காள தேசத்தில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்த மாணவர்களுக்கு “றஸகார்” என்ற முத்திரையைக் குத்தியதே ஷேக் ஹஸீனா செய்த மாபெரும் தவறாக நோக்கப்படுகிறது.

## அடக்குமுறைக்கு எதிராக வெடித்த எதிர்ப்பு

கடந்த ஜூலை மாதம் 14ம் திகதி நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், அப்போது வேலை வாய்ப்புகளை கோட்டா அடிப்படையில் வழங்குவதை எதிர்த்து, ஒரு வாரத்துக்கு மேலாக மாணவர்கள் முன்னெடுத்து வந்த போராட்டங்கள் தொடர்பாக ஷேக் ஹஸீனாவிடம் ஒரு ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அந்தக் கேள்விக்கான பதிலை மிகவும் அலட்சியமாக வழங்கிய ஷேக் ஹஸீனா “சுதந்திரப் போராளிகளின் பேரப்பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்புகளுக்கான கோட்டா கொடுக்கப்படாவிட்டால் வேறு யாருக்கு அது கிடைக்க வேண்டும்? றஸகாரின் பேரப்பிள்ளைகளுக்கா?” என்று பதில் அளித்தார்.

வேலைவாய்ப்புக்கான கோட்டா விடயம் தொடர்பாக ஷேக் ஹஸீனா தெரிவித்த கருத்துகளுக்கு எதிராக உடனடியாகவே எதிர்ப்புகளும் ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

1971ம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட சுதந்திர இயக்கத்தில் பங்குபற்றிய சுதந்திரப் போராளிகளின் வாரிசுகளுக்கென 30 வீதமான வேலை வாய்ப்புகளை ஒதுக்கிய, அரச வேலைவாய்ப்புகளை வழங்குவது தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த அநீதியான கோட்டா முறையை எதிர்த்து தாம் முன்னெடுத்து வந்த எதிர்ப்புப் போராட்டங்களை ஷேக் ஹஸீனா உதாசீனம் செய்ததாக மாணவர்கள் உணர்ந்தார்கள்.

இந்த செய்தியாளர் சந்திப்பு நடைபெற்ற ஒருசில மணித்தியாலங்களுக்குள்ளாகவே டாக்காவின் பல்கலைக்கழக வளாகத்தில், “ நீ யார்? நான் றஸகார்” என்ற சுலோகத்தை உச்சரித்துக்கொண்டு மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கினார்கள்.

மாணவர்கள் முன்னெடுத்த போராட்டங்களை, தனது கட்சியின் மாணவப் பிரிவான வங்காள தேச சாத்திர லீக்கைப் பயன்படுத்தியும், காவல்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## ஷேக் ஹஸீனா... தொடர்ச்சி ...

துறையைப் பயன்படுத்தியும், ஆர்ப்பாட்டங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க ஹஸீனா முயற்சித்தார். இதன் காரணமாக ஜூலை 16ம் திகதி டாக்காவில் வன்முறைகள் வெடித்தன. அன்றைய தினம் நடைபெற்ற வன்முறைகளில் 6 பேர் கொல்லப்பட்டார்கள்.

தொடர்ந்து வந்த 4 நாட்களில், மாணவர் படையும், காவல்துறையும் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் பெரும்பான்மையாக மாணவர்கள் மற்றும் சாதாரண அப்பாவிப்பொதுமக்கள் உள்ளிட்ட 200 பேர் வரை கொல்லப்பட்டார்கள்.

வெடித்த வன்முறைகள் தொடர்பான கண்டனங்களைப் பதிவுசெய்யாது, மெற்றோ ரயில் மற்றும் அரசாங்கத்துக்குச் சொந்தமான தொலைக்காட்சிக் கட்டடங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் தொடர்பாகவே ஹஸீனா கவனம் செலுத்தினார்.

ஹஸீனா நிபந்தனையற்ற மன்னிப்பை மேற்கொள்ள வேண்டும் என்றும், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரான அசாட்டுஸமான் கான் உள்ளிட்ட ஏனைய அமைச்சர்கள் பதவி விலக வேண்டும் போன்ற விடயங்களை உள்ளடக்கிய 9 அம்ச சீர்திருத்தங்களை தொடக்கத்தில் முன்வைத்த மாணவர்கள், போராட்டங்களை அடக்க மேற்கொண்ட ஷேக் ஹஸீனா மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமான மிகவும் கடுமையான கோபத்துக்கு உள்ளானார்கள்.

### ஹஸீனா ஆட்சியதிகாரத்துக்கு வந்தது எவ்வாறு?

அன்றைய கிழக்குப் பாகிஸ்தானில் 1947ம் ஆண்டு பிறந்த ஹஸீனா, சிறுவயது முதலே அரசியலில் ஈடுபாடுகொண்டவராக இருந்தார். "தேச பிதா" என்று அழைக்கப்பட்ட அவரது தந்தையான ஷேக் முஜிபுர் ரஹ்மான் பாகிஸ்தானுக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்து, 1971 இல் வங்காள தேசத்தின் முதல் அதிபராகப் பதவியேற்றார்.

அவரது தந்தை நாட்டின் அதிபராகப் பதவியேற்ற சந்தர்ப்பத்திலேயே டாக்காப் பல்கலைக் கழகத்தின் ஓர் முன்னணி மாணவத் தலைவியாக ஷேக் ஹஸீனா தன்னை அடையாளப்படுத்தி இருந்தார். 1975ம் ஆண்டில் இராணுவம் முன்னெடுத்த பதவிக்கவிழ்ப்பு சதிமுயற்சியில் அவரது தந்தையும் ஏனைய பல குடும்ப உறுப்பினர்களும் கொல்லப்பட, அப்போது வெளிநாட்டில் இருந்த ஷேக் ஹஸீனா மற்றும் அவரது சகோதரி ஆகியோர் உயிர்தப்பியிருந்தார்கள்.

ஒரு குறிப்பிட்ட காலம் இந்தியாவில் அஞ்ஞாதவாச வாழ்வை வாழ்ந்த ஹஸீனா, 1981இல் நாடு திரும்பி, தனது தந்தையால் தாபிக்கப்பட்ட அவாமி லீக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

ஜெனரல் மொஹமட் ஏர்ஷாட்டின் இராணுவ அரசுக்கு எதிராக சனநாய சார்பு போராட்டங்களை முன்னெடுத்த ஹஸீனா விரைவாகவே நாட்டின் ஒரு முக்கிய தலைவர் என்ற நிலைக்கு உயர்ந்தார்.

தண்ணீரைப் பங்கிடுவது தொடர்பாக இந்தியாவுடன் ஒரு உடன்படிக்கையை மேற்கொண்டும், தென்கிழக்கு வங்காள தேசத்தில் போராடி வந்த பூர்வீகக் குடிகளைச் சேர்ந்த போராளிகளுடன் ஒரு அமைதி உடன்படிக்கையே மேற்கொண்டும் 1996ம் ஆண்டு நாட்டின் அதிபராக ஷேக் ஹஸீனா முதல் தடவையாகப் பதவியேற்றார்.

ஆனால் பின்னர், அவரது நிர்வாகம் தொடர்பாக ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதுடன், இந்தியா பக்கம் சார்ந்திருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு, பதவியிழக்க முன்னர் அவரது கூட்டாளியாக இருந்த பின்னாளில் அவரது எதிரியாக மாறிய பேகம் காலெதா ஸியா அதிபராகப் பதவியேற்றார்.

2008ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அமோக வெற்றி பெற்ற ஹஸீனா மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ச்சியாகப் பதினாறு வருடங்கள் அரசுக்குத் தலைமை தாங்கினார்.

பல ஆண்டுகள் நீடித்த அவரது ஆட்சிக் காலத்தில், அரசியல் ரீதியாக பலர் கைதுசெய்யப்பட்டுச் சிறைவைக்கப்பட்டதுடன், பலர் வலிந்து காணாமலாக்கப்பட்டதோடு, இன்னும் பலர் நீதிக்குப் புறம்பான கொலைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

### கறைபடிந்த வரலாறு

"மனிதாயத்துக்கு எதிரான மேற்குறிப்பிட்ட குற்றங்களுக்காக ஹஸீனாவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். நாட்டு மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி, அவ்வாறான ஒரு சூழலிலேயே அவர் ஆட்சி நடத்தினார். அடக்குமுறையான சட்டங்களை அவர் அமுல்நடத்தியது மட்டுமன்றி இவ்வாறான அட்டூழியங்களை மேற்கொள்ள தனது பாதுகாப்புப் படைகளை அவர் பயன்படுத்தினார்" என்று ஜோபான் இதழாசிரியரான ஜெஸாவுல் கரீம் றோனி கருத்துத் தெரிவித்தார்.

மனித உரிமை கண்காணிப்பகத்தின் அறிக்கையின் படி, 2009 இல் ஷேக் ஹஸீனாவின் பதவிக்காலம் தொடங்கியதிலிருந்து, 600 பேர் காணாமலாக்கப்பட்ட குற்றங்களில் அவரது பாதுகாப்புப்படையினர் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றனர்.

2015 ஜனவரியிலிருந்து அவ்வாண்டு டிசம்பர் வரை, பாதுகாப்புப் படையினரால் தீவிரவாதிகள் அல்லது பயங்கரவாதிகள் என அடையாளப்படுத்தப்பட்ட 755 பேர் நாடு தழுவலாக நடைபெற்ற 143 துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று மனித உரிமை கண்காணிப்பகத்தின் பிறிதொரு அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

சட்டத்தைப் பயன்படுத்தி, பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தவர்கள் அச்சுறுத்திப் பணம் பறித்துவந்ததன் காரணத்தால், பல்லாயிரக் கணக்கானவர்கள் தமது இல்லிடங்களை விட்டு வெளியேறி, தலைமறைவாக வாழவேண்டியிருந்தது" என்று றோணி மேலும் தெரிவித்தார்.

"நீதிபரிபாலனம், தேர்தல் ஆணையம், ஊடகத்துறை, சட்ட ஒழுங்கை நிலைநாட்டுதல் உள்ளிட்ட விடயங்களில் ஊழல்களைத் தோற்றுவித்ததே வங்காள தேசத்துக்கு அவர் ஏற்படுத்திய உச்சக்கட்டச் சேதமாகும்" என்று அரசியல் ஆய்வாளரான ஸாஹித் ஊர் ரஹ்மான அல்ஜஸீராவைச் சேர்ந்த ஊடகவியலாளரிடம் தெரிவித்தார். இவ்வாறான அமைப்புகளை ஊழலற்ற ஒரு நிலைமைக்குக் கொண்டுவருவதற்கு நீண்ட காலம் எடுக்கலாம்.

ஊழலைக்களையத்தான்நடவடிக்கைஎடுப்பதாக ஹஸீனா முன்னர் தெரிவித்திருந்தார். ஆனால் ஊழல்களைக் களைவதற்கான உண்மையான ஆர்வம் அரசாங்கத்தில் இருக்கவில்லை என்று அவரது விமர்சகர்கள் தெரிவிக்கிறார்கள்.

உண்மையில் வங்காளதேசத்தின் சுதந்திரப் போரின் வரலாற்றைத் திரிவுபடுத்தி, ஹஸீனா அதற்குக் களங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்.

"றஸகார்" என்ற பதத்தைப் பயன்படுத்தி தங்களை ஹஸீனா அழைத்தது தொடர்பாக மிகவும் கடுமையான கோபத்துக்கு உள்ளான மாணவர்கள் அரசியல் இலாபத்தை நோக்காகக் கொண்ட ஹஸீனாவின் பிரித்தாளும் அரசியலை எதிர்த்து அந்தப் பதத்தையே தமது சுலோகமாகப் பயன்படுத்தினார்கள்" என றஹ்மான் சுட்டிக்காட்டினார்.

*"கடைசியாக அவரது வீழ்ச்சிக்கு இதுவே காரண மாக அமைந்தது".*

**நன்றி: அல்ஜஸீரா**

## கொக்குத்தொடு ... தொடர்ச்சி ...

காவல்துறையினரால் எடுக்கப் பட்ட குறிப்புகள் நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். மீட்கப்பட்ட எலும்புக்கூட்டு தொகுதிகள் மற்றும் சான்றுகள் பாதுகாக் கப்பட வேண்டும். அத்தோடு இந்த அகழ்வின் போது பல இலக்கத் தகடுகள், இலக்கங்கள் கண்டுபிடிக் கப்பட்டன. அதை பத்திரிகைகளில் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற பதிவாளரினால் பிரசுரிக்கப் படவேண்டும்.' என கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் ஒரு மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. இது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில், அங்கு கிடைத்த பொருட்களை ஆராய்ந்து தொல்பொருள் அதிகாரிகள் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தனர்.. அதில் அப்புதைகுழி 1990களில் போர் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதுபோன்ற அறிக்கை ஒன்று அரச தரப்பில் வெளி வந்தது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் பொது ... தொடர்ச்சி ...

போனால் குரல் அற்ற சமூகமாக மாறும் நிலைமையே ஏற்படும் என்பதை பொறுப்புள்ள சிவில் சமூகம் என்ற அடிப்படையில் தெரிவித்துக்கொள்கின்றோம். கட்சி வேறுபாடுகளை மறந்து வடக்கு கிழக்கு மக்கள் ஒரு குடையின் கீழ் ஒன்றுபடுவதற்கான சந்தர்ப்பத்தினை அனைவரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கோரிக்கையினை முன்வைக்கின்றோம்' என்றுள்ளது.

## முறைகேடுகளை ... தொடர்ச்சி ...

வரை காத்திருக்க வைத்து அலைக்கழித்துள்ளார் என்பதும் அம்பலமாகியுள்ளது.

தனது சொந்த தேவைக்காக நோயாளர்களை காக்கவைத்து அலைக்கழித்துள்ளதுடன் அம்பியூலன்ஸ் வண்டியில் வீடு திரும்பியுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாத செய்றபாடுகளாகும். குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுத்து இவ்வாறான தவறுகள் மீளவும் நடைபெறாதென்பதனை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

ஆனால் எமது இனத்தின் உயர்ந்த அறிவு சார் சமூகமாக கருதப்படும் மருத்துவ சமூகத்தால் புலம்பெயர் அமைப்புக்களின் துணையுடன் மேற்கொள்ளப்படும் இந்த முறைகேடுகளை தமிழ் சட்டவாளர்கள் கேடையமாக காத்து நிற்கையில் அதனை எதிர்த்து போராடுவது என்பது தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் சவாலான விடையம் என்பது தான் இங்கு முக்கியமானது.

• • •

## ஆங்கில நாட்டில் ... தொடர்ச்சி ...

சுதந்திரத்திற்காக ஸ்காட்லாந்து நாட்டினர் தொடர்ந்துப் போராடிக் கொண்டே இருக்கின்றனர். அதேபோல, வேல்ஷ் மக்களும் கார்னீஷ் மக்களும் தங்கள் மொழிக்கான உரிமைக்குரலை எழுப்பி வருவதோடு, சில நிர்வாக மாற்றங்களையும் வெற்றிகளையும் கண்டு வருகின்றனர். தனிநாட்டிற்கான போராட்டமாக மாறவில்லை யெனினும், ஒருவேளை, மாறாமல் கூட போகலாம் என்றாலும், மொழிக்கான உரிமைக்குரல், சுயாட்சி வரை நீளவே அதிக வாய்ப்புள்ளது, அதற்குரிய அறிகுறிகள் சில பிரித்தானியாவின் ஐரோப்பிய ஒன்றிய வெளியேறல் (Brexit)க்கு பிறகு தென்படத்தொடங்கியுள்ளது.

• • •

## பனங்கொட்டை ... தொடர்ச்சி ...

தொடர்பில் மக்கள் இன்று பல விழிப்புணர்வுகளை தேடிக்கொண்டிருக்கின்றார்கள்.

நிறைய அவதானிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்! ஒரு நாள் இல்லை ஒருநாள் இது பல பெரும்புள்ளிகளை வெளிச்சம் போட்டுக் காட்டக்கூடும். பலரை வாழ்நாளில் மீளமுடியாத நிலைகளில் தள்ளவும் கூடும்.

மருத்துவத்துறையில் மட்டுமல்ல ஏனைய துறைகளிலும் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறலும் என்று உருவாகிறதோ அன்றுதான் உண்மையான மாபியா அழியும்.

**இதனிடையே, வைத்தியக் கலாநிதி வினோதன் தர்மராஜன் மன்னர் படுகொலை தொடர்பில் கூறியதாவது:**

ஒரு சில மேலதிகாரிகளின் பொறுப்பற்ற செயல்களினால் குளிர் விட்டுப்போன உணர்வுகள் எவையுமற்ற ஜடங்கள் போன்ற விரல் விட்டு எண்ணகூடிய ஒரு சில மருத்துவப்பணியாளர்களின் அலட்சியத்தினால் சிந்துஜா என்ற இளந்தாயின் அவல மரணம் நிகழ்துள்ளது சம்பவம்.

கிடைத்த தகவல்கள் ஆரோக்கியமானதாக இல்லை. அவரை வைத்தியசாலையில் அனுமதிக்கும் வரை எந்தவொரு இடத்திலும் தாமதம் ஏற்படவில்லை.

ஆனால் வைத்தியசாலையில் அனுமதித்த முதல் நிமிடம் முதல் குருதிப்பெருக்குடன் வரும் சத்திரசிகிச்சை மூலம் குழந்தை பிரசவித்த தாய்க்கு பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் எந்தளவு தூரம் பின்பற்றப்பட்டது என்பது தொடர்பில் பெரும் கரிசனையுள்ளது. (இந்த நடைமுறை தொடர்பான சுற்றறிக்கையை தரமுடியுமா என்று எவரும் கேட்டு காமெடி பண்ணவேண்டாம்; அந்த நடைமுறை தான் எமக்கு மருத்துவ, தாதிய கல்லூரிகளில் கற்பிக்கப்படுகின்றது).

குருதிப்பெருக்குடன் வந்த தாய் முதலில் அவசர சிகிச்சை பிரிவிலேயே அனுமதிக்கப்பட்டிருக்கவேண்டும் அங்கு இடமில்லை என் zறால் அனுமதிக்கப்பட்டவுடன் விடுதி on call மருத்துவருக்கு OPDயில் இருந்து அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். இங்கு அது பின்பற்றப்பட்டதா என்பது முதல் கேள்வி

விடுதியில் இவ்வாறான தீவிர நிலைமையுடைய தாய்மார் தீவிர கண்காணிப்பு பிரிவில் (High Dependency Unit) வைக்கப்பட்டு தாதிய, குடும்பநல உத்தியோகதர்களால் 15 நிமிடத்திற்கு ஒருதடவை கண்காணிக்கப்பட வேண்டும். (இதற்காக தான் 26 மில்லியன் ரூபா செலவில் இந்த மகப்பேறு விடுதி கடந்த வருடம் புனரமைக்கப்பட்டு , அனைத்து நவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன மன்னார் - ஐக்கிய இராச்சிய நலன்புரி அமைப்பின் நிதிப்பங்களிப்பில் வழங்கி வைக்கப்பட்டது.)

**இதுவும் ஒழுங்காக நடைபெற்றதா என்பது அடுத்த கேள்வி.**

விடுதி on call வைத்தியர் அழைத்தும் வரவில்லை என்றால் "பரவாயில்லை நாங்கள் நித்திரைக்கு செல்வோம். பொழுது விடிய பார்த்துக்கொள்ளலாம்" என்று தாதிய, குடும்பநல உத்தியோகத்தர்கள் வாளாவிருக்க முடியாது.

உடனையாக இதுபற்றி இரவு on call தாதிய சகோதரிக்கு அவர்கள் அறிவிக்கவேண்டும். அந்த தாதிய சகோதரி இதனை உடனடியாக OPD மருத்துவருக்கு அறிவிக்கவேண்டும். இரவு OPD மருத்துவர் தான் அந்த நேரத்தில் வைத்தியசாலை பணிப்பாளருமாவார்.

அவருடைய பரிந்துரையுடன் அந்த தாய்க்கு இரண்டு கரங்களிலும் குருதியையும், குருதிநாள திரவங்களையும் வழங்கக்கூடிய Wide Bore Cannula களை நிலைநிறுத்தி, உடனடியாக இரத்தமேற்றுவதற்கு முன்னர் செய்யவேண்டிய Blood grouping and DT பரிசோதனைக்குரிய குருதி மாதிரியை எடுத்து குருதி வங்கிக்கு அனுப்பிவிட்டு குருதிநாள திரவங்களிலொன்றை OPD மருத்துவரின் பரிந்துரையுடன் தாய்க்கு செலுத்த ஆரம்பிக்க வேண்டும்.

இந்த இடைவெளியில் OPD மருத்துவர் நிலைமையின் விபரீதத்தை மகப்பேற்று வைத்திய நிபுணருக்கு அறிவிக்கவேண்டும். Cannula செலுத்துவதில் தாதிக்கு ஏதாவது சிக்கல் நிலைமை இருந்தால் அந்த நேரத்தில் on call மருத்துவர் இல்லாதவிடத்து உணர்வழியியல் மருத்துவ அணியினரை OPD மருத்துவர் மூலம் அழைக்க வேண்டும்.

எனக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் உணர்வழியியல் மருத்துவ அணியின் விசேட வைத்திய நிபுணர் உள்ளடங்கலாக, அந்த தாய் அனுமதிக்கப்பட்ட நேரத்தில் முழு ஆயத்த நிலையில் இருந்துள்ளனர். ஆனால் அவர்களுக்கு தகவல் செல்லவில்லை. அவர்கள் மறுநாள் காலை ஏழு மணியின் பின்னரே அழைக்கப்பட்டுள்ளனர்.

அந்த நேரத்தில் அந்த தாய் மீள ஈடு செய்யமுடியாதளவு குருதியை இழந்து மயக்க மடைந்து Peripheral Shutdown நிலைக்குச் சென்றுள்ளார். அதன்பிறகு அவர்களுக்கு அங்கே செய்துகொள்ள பெரிதாக ஒன்றும் இருக்கவில்லை.

எனவே Emergency escalation protocol activation இலும் பிரச்சனைகள் உள்ளன.

3. குருதிப்பெருக்குடன் வந்த தாய் பல தடவைகள் குளியலறைக்கு கழுவிவிட்டு வருமாறு நடத்தி அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இது முற்றிலும் பிழையான ஒரு நடைமுறை. அவரை Wheel chair இல் கொண்டு செல்ல அங்கு சுகாதாரப்பணி உதவியாளர்கள் எவரும் கடமையில் இருக்கவில்லையா என்பது இங்கு மிகப்பெரும் கேள்வி.

ஆக மொத்தத்தில் மன்னார் மாவட்ட மருத்துவ நிர்வாகி கூறுவது போல "ஒரு மருத்தவரின் அலட்சியதினால் தான் மரணம் நிகழ்ந்தது, மாவட்டப் பொது வைத்தியசாலையில் மருத்துவர்கள் இருவாரம் வேலைசெய்துவிட்டு இருவாரம் வீட்டில் நிற்கின்றார்கள்" (அவர் மாதத்தில் எத்தனை நாட்கள் வேலை செய்கிறார் என்று எவரும் கேட்டு தயவுசெய்து எவரும் அவரைச் சங்கடப்படுத்த வேண்டாம் ) என்பதை நம்பி அந்த மருத்துவருடன் இந்த விடயத்தை கடந்து சென்றால் இது போன்ற மரணங்கள் தொடர்ந்து இடம்பெறுவதை எவராலும் தடுத்து நிறுத்தமுடியாது.

**திணைக்கள விசாரணை பயன்தருமா?**

ஒருவேளை நியாயமாக திணைக்கள விசாரணை இடம்பெற்றால் தவறு நிகழ்ந்த இடத்தில் கடமையில் இருந்த ஒருசிலர் தண்டிக்கப்படலாம். ஆனால் தவறுக்கு பொறுப்பு கூறவேண்டிய மருத்துவ நிர்வாகிகள் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள். இதனால் இவ்வாறான தவறுகள், அலட்சியங்கள் தொடர்ந்து இடம்பெறும்.

அத்துடன் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு, குறிப்பாக அந்த பச்சிளம் குழந்தைக்கு எந்த நிவாரணமும் கிடைக்காது. அதற்குரிய ஏற்பாடுகள் திணைக்கள விசாரணை நடைமுறைகளில் இல்லை.

எனவே அநியாயமாக இறந்த சிந்துஜாவிற்கு நீதி கிடைக்கவும், பாதிக்கப்பட்ட குழந்தை மற்றும் குடும்பத்திற்கு நிவாரணம் கிடைக்கவும் சட்ட நடவடிக்கையே உகந்தது.

**என்னால் எவ்வாறு உதவ முடியும்?**

22 பேர் அணியோ அல்லது மன்னாரையோ வேறு வடபுல மாவட்டங்களைச் சேர்ந்த சேர்ந்த சட்டத்தரணிகள் அணியோ தன்னார்வத்துடன் வழக்கொன்றை தாக்கல் செய்யும் பட்சத்தில் அதற்குரிய மருத்துவத் துறைசார் தொழிநுட்ப ஆலோசனைகளை எந்தவிதமான கட்டணமுமின்றி வழங்க நான் தயார்.

அதற்காக 0718474361 என்ற Wharsapp இலக்கம் மூலம் என்னைத் தொடர்பு கொள்ள முடியும்.

அலட்சியதினால் ஏற்படும் மருத்துவத் தவறுகள் தண்டனைக்குரியவை என தெரிவித்துள்ளார்.

தற்போது எழும் கேள்வி என்னவெனில், இதுவரைகாலமும் விழலுக்கு இறைத்த நீராக தமது பணத்தை 98 விகித காடுகளை கொண்ட முல்லைத்தீவில் பனங்கொட்டை நட்டு சாதனை படைத்தும், மாதம் 2 இலட்சம் ரூபாய்கள் செலவில் பராமரிக்க வேண்டிய பாடசாலை விளையாட்டு மைதானத்தை பல இலட்சம் ரூபாய்கள் செலவில் அமைத்துக் கொடுத்தும் தம்பட்டம் அடிக்கும் புலம்பெயர் அமைப்புக்கள் இந்த படுகொலைக்கு நீதி வேண்டி போடப்படும் வழக்குகளை முன்னின்று நடத்த தமது உதவிகளை வழங்கவார்களா என்பது தான்?

• • •

## ஹமாஸின் ... தொடர்ச்சி ...

வாழ்ந்து வந்தாலும் சின்வர் காசாவில் தான் நிலைகொண்டுள் ளார். சின்வரின் நியமனம் என் பது கசா பகுதியில் ஹமாஸ் பலமாக உள்ளது என்பதை காட்டுவதாகவும், ஹமாஸ் கடும்போக்காளர் ஒரு வரை நியமித்துள்ளது என்பது மோதல்கள் அதிகரிக்கும் சாத்தியங்களே தென்படுவதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

காசா பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்களில் சின்வர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் முன்னர் அறிவித்திருந்தது. சின்வரும் தலைமறைவாகவே வாழ்ந்து வருகின்றார். இந்த நிலையில் அவரின் நியமனம் அவர் உயிருடன் உள்ளதையே காட்டுகின்றது.

இதனிடையே சின்வரின் நியமனத்தை ஹிஸ்புல்லா, ஏமன் குதீஸ் அமைப்பு மற்றும் ஈரான் ஆகியன வரவேற்றுள்ளன. காசாவில் மக்களுடன் தங்கியிருக்கும் சின்வரின் நியமனம் அமெரிக்காவுக்கும், இஸ்ரேலுக்கும் காத்திரமான செய்தியை சொல்லியுள்ளதாக ஹிஸ்புல்லா அமைப்பு தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

## அவுஸ்திரேலிய... தொடர்ச்சி ...

அலுவலகத்திற்கு முன்பாக ஏதிலிகளாகிய நாம் எமக்கு நிரந்தர வதிவிட உரிமை வழங்கக் கோரி தொடர் 24 மணிநேர அமைதிவழிப் போராட்டம் ஒன்றை நடாத்தி வருகின்றோம்.

எமது சொந்த மண்ணில் வாழ நிர்க்கதியற்று அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்துள்ள நாம் கடந்த 12-14 வருடங்களாக நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்படாது தொடர்ந்தும் வஞ்சிக்கப்படுகின்றோம்.

எமது சொந்த நிலத்திற்கும் மீளத்திரும்ப முடியாத உயிர்ப் பாதுகாப்பின்மை ஒருபுறம் புகலிடக்கோரிக்கைகள் மறுக்கப்பட்டு நிரந்தர வதிவிட உரிமையற்ற அங்கலாய்ப்பு மறுபுறமாக தொடர்ச்சியான உளச்சிதைவுகளால் நாம் துவண்டு போயிருக்கின்றோம் .

போராட்டமே வாழ்வாகிப் போன எமக்கு வேறுவழிகளன்றி எமது இறுதி முயற்சியாகவே இந்த அமைதி வழியிலான போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம்.

எனவே எமது இப்போராட்டம் வெற்றியளித்து எமக்குரிய வாழ்வுரிமை கிடைப்பதற்காக உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பினை இருகரம் கூப்பி வேண்டிநிற்பதோடு எமது போராட்டக்களத்திற்கு அணிதிரண்டு வந்து எமக்கு உறுதுணையாக நிற்குமாறும் பணிவாக வேண்டிக்கொள்கின்றோம்.

### ஒவ்வொன்றாக ... தொடர்ச்சி ...

பொருளாதார வீழ்ச்சி அங்கு போராட்டத்தை ஏற் படுத்தவில்லை. மாறாக பூகோள அரசியல் காய்ந கர்த்தல்களின் விளைவாக இந்திய-சீன சார்ப்பு அரசு அகற்றப்பட வேண்டிய நிலை ஒன்று அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருந்தது.

இலங்கையை போலவே அங்கு இடம் பெற்ற மனித உரிமை மீறல்களைக் காரணம் காட்டி பங்களாதேசத்தின் இராணுவ ஜெனரல் கள் மீது பயணத்தடைகளை அமெரிக்கா கொண்டு வந்திருந்தது. தேர்தல் ஜனநாயக வழியில் இடம்பெறவில்லை என்ற குற்றச்சாட்டையும் அமெரிக்கா முன்வைத்திருந்தது. ஜி-20 மாநாட்டிற்கு ஹசீனா அழைக்கப்பட்டபோது அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அவரை சந்தித்தபோதும், அமெரிக்கா தனது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களில் இருந்து பின்வாங்கவில்லை.

அவாமி கட்சி மீது அமெரிக்கா தொடர்ந்து குற்றம்சுமத்தியே வந்துள்ளது. பங்களாதேசத்தின் குற்றத் தடுப்பு பிரிவு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு பிரிவு ஆகியவற்றின் மீது மனித உரிமை மீறல்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து பைடன் அரசு 2021 ஆம் ஆண்டு தடைவிதித்திருந்தது. தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டவர்களுக்கான நுளைவு அனுமதியையும் அமெரிக்கா தடை செய்திருந்தது.

ஆனால் எதிர்க்கட்சியை அமெரிக்காவும், பிரித்தானியாவும் ஆதரிப்பதன் ஊடாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்த முற்படுகின்றனர் என ஹசீனா குற்றம் சுமத்தியிருந்தார்.

ரஸ்யா, இந்தியா மற்றும் சீனா தலைமை யிலான பிறிக்ஸ் பொருளதார கூட்டமைப்பில் பங்களாதேசம் இணையவிரும்புவதாக அதன் வெளிவிவகார அமைச்சர் அண்மையில் தெரி வித்ததுடன், ரஸ்யாவின் அணுஉலைகளுக்கான அனுமதியை பங்களதேசம் வழங்கியது, சீனாவின் பட்டுப்பாதைத்திட்டத்தில் இணைய அது சம்மதித்தது, வர்த்தகப் பணப்பரிமாற்றத்தை யூவானில் மேற்கொள்ள பங்களாதேசம் முனைந்த தும் அமெரிக்காவின் சினத்தை அதிகரித்திருந்தது.

கடந்த சில ஆண்டுகளில் 12 நெடுஞ்சாலை களையும் 21 பாலங்களையும், 27 மின்சக்தி திட்டங்களையும் சீனா பங்களாதேசத்தில் அமைத் திருந்தது.

ஹசீனாவின் தந்தையார் சேக் முஜிபூர் ரஹ்மான் சுதந்திரத்தின் பின்னர் ஒரு கட்சி ஆதிகாரத்தை ஏற்படுத்தியிருந்தார். அதன் பின்னர் ஹசீனா சர்வாதிகார ஆட்சியை மேற்கொண்டு வருகின்றார் என அமெரிக்காவின் வெளிவிவகார கொள்கை என்ற ஊடகம் தெரிவித்திருந்தது. 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலும் ஆட்கள் காணாமல்போவது, மனித உரிமை மீறல்கள், எதிர்கட்சிகள் கண்காணிக் கப்படுவது, றொகிங்கியா பிரச்சனை ஆகியன அதிகரித்திருந்தது. எனவே தேர்தல் ஐ.நாவின் கண்காணிப்பில் இடம்பெறவேண்டும் என அந்த ஊடகம் தெரிவித்திருந்தது.

அதாவது கடந்த 15 வருடங்களாக ஆட்சி யில் இருக்கும் சர்வாதிகாரி என்ற குற்றச்சாட்டு மற்றும் 1971 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சார் பாக பாகிஸ்தானுடன் போர் புரிந்து இந்திய படையினரின் துணையுடன் சுதந்திரம் பெற்ற பங்காளாதேசத்தின் முதலாவது பிரதமரான ஹசீனா வின் தந்தையார் 1972 ஆம் ஆண்டு கொண்டுவந்த சுதந்திரபோராட்ட வீரர்களின் உறவினர்களுக்கான இட ஒதுக்கீடு திட்டம் என்பனவே ஹசீனாவை வீழ்த்தவதற்கு அமெரிக்கின் சி.ஐ.ஏ கையில் எடுத்த ஆயுதம்.

அதற்கு துணைபுரிந்தது முகநூல், ருவிட்டர், வற்ஸ்அப் போன்ற மேற்குலகத்தின் சமூகவலைத்தளங்கள். எவ்வாறு வெனிசுலாவில் ருவிற்றரின் ஊடாக ஒரு படைத்துறை புரட்சியை ஏற்படுத்த ருவிட்டர் தளத்தின் உரிமையாளர் எலோன் முஸ்க் முயன்றாரோ அதனைப் போன்றதே இதுவும்.

மாணவர் போராட்டம் ஆரம்பமாகிய ஒருவாரத்தில் டாக்காவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அதிகாரியும் நாட்டைவிட்டு வெளி யேறியிருந்தார். பாகிஸ்தானிலும் அமெரிக்காவின் புலனாய்வு அமைபான சி.ஐ.ஏ இராணுவப்புரட்சி ஒன்றை ஏற்படுத்தியிருந்தது. இலங்கையிலும் அதுவே நிகழ்ந்திருந்தது.

இலங்கையில் எவ்வாறு சில வாரங் கள் ஒழுங்கு செய்யப்பட்டு நேர்த்தியாக வழிநடத்தப் பட்ட மக்கள் ஆரப்பாட்டம் அரசை கவிழ்த்ததோ அதனைப்போலவே பங்களாதேசத்தில் இடம் பெற்ற மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் மிகவும் நேர்த்தியாக ஒழுங்கு செய்யப்பட்டு முகம் தெரியாத தரப்பு ஒன்றினால் மிகவும் சிறப்பாக வழிநடத்தப்பட்டுள்ளது.

அதாவது மேற்கு, கிழக்கு தெற்கு பகுதிக ளால் இந்தியா சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இந்த திசைகளில் உள்ள இந்திய சார்பு அரசுகள் திட்ட மிட்ட முறையில் அகற்றப்பட்டுள்ளன. திபத்து தொடர்பான பிரச்சனையை உருவாக்கினால் வடக்கிலும் இந்தியாவுக்கான அச்சுறுத்தல்கள் தோன்றலாம்.

பாகிஸ்தான், இலங்கை பங்களாதேசம் என கடந்த இரண்டு வருடங்களில் அமெரிக்கா இந்தியாவின் பிராந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத் தலாக மாறியுள்ளது. அடுத்தது நேபாளமா? என்ற கேள்விகளும் எழுந்துள்ளன. ஆனால் இந்த நாடுகளில் ஏற்பட்ட மக்கள் எழுச்சிகளில் சமூகவலைத்தளங்களே அதிகம் பயன்படுத்தப் பட்டுள்ளன.

எனவே எதிர்காலத்தில் இந்தியா இந்த சமூகவலைத்தளங்களை கட்டுப்படுத்துமா? மேற்குலகம் சார்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களை இந்தியா தடை செய்யுமா? சீனா, ரஸ்யா போல இந்தியாவுக்கு அது சாதகமானது அல்ல.

தற்போது ஏற்பட்டுள்ள பூகோள அரசியல் சிக்கல் என்பது இந்தியாவுக்கு பாதகமானது என்பது தெளிவானது. அது இந்தியாவின் பிராந்திய வெளிவிவகாரக் கொள்கையின் தோல்வியாகவும் பார்க்கப்படுகின்றது.

• • •

### அமெரிக்காவில் ... தொடர்ச்சி ...

தோல்வி யடைந்திருந்தார். அதன்பின்னர் அவர் அரச தலைவருக்கான போட்டி யில் இருந்து விலகியிருந்தார்.

போட்டியில் இருந்து வில கிய பின்னர் அளித்த முதலாவது நேர்காணலிலேயே அமெரிக்கா வில் ஒரு உள்நாட்டு கலவரம் எற்படலாம் என அவர் முதல் முதலாக தெரிவித்துள்ளார்.

குடியரசுக் கட்சியோ அல்லது ஜனநாயகக் கட்சியோ யார் வெற்றிபெற்றாலும் அமைதியான ஆட்சிமாற்றம் நிகழப்போவதில்லை. டொனா ல்ட் டிறம் பெற்றி பெற்றாலும், தோல்வி யடைந்தாலும் அமெரிக்காவில் கலவரங்கள் ஏற்படுவதை தடுக்க முடியாது.

குடியரசுக்கட்சி வேட்பாளர் டிறம் பேசும் போது தான் தோல்வியடைந்தால் இரத்தக்களரி ஏற்படும் என தெரிவித்திருந்தார். அவர் கூறியதை நாம் பெரிதாக எடுக்காவிட்டாலும் தற்போதைய நிலையை பார்க்கும் போது அவ்வாறே தெரிகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பிரித்தானியா கல ... தொடர்ச்சி ...

மற்றும் வடக்கு அயர்லாந்தில் உள்ள நகரங்களில் வன்முறை சீர்குலைவு ஏற்பட்டுள்ளது.தாக்கு தல் நடத்தியவர் தொடர்பாக சமூகலைத்தளங்களால் தவறான தகவல்களால் அமைதியின்மை தூண்டப்பட்டது.

இந்த தாக்குதலை மேற்கொண்டவர் 17 வயதான அலக்ஸ் முகன்வா ருடகுபானா என்ற சிறுவன். வேல்ஸ் மாநிலத்தின் கார்டிப் நகரத்தில் பிறந்த அவரின் பூர்வீகம் றுவான்டாவாகும். அவர் கிறிஸ்த்தவ மதத்தைச் சேர்ந்தவர்.

இந்த தாக்குதல் ஒரு பயங்கரவாதத் தாக்கு தல் எனவும் அது சட்டவிரோதமாக படகில் வந்த முஸ்லீம் குடியேற்றவாசி ஒருவரால் மேற்கொள்ளப்பட்டதாக தவறான செய்திகள் சமூகவலைத்தளங்களில் உடனடியாகவே பகிரப் பட்டிருந்தன.

இதுவரையில் 400 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. முஸ்லீம் மற்றும் ஆசிய இனத்தவர்கள் உட்பட சிறுபான்மை மக்கள் மீது தாக்குதல் நடத்தும் பிரித்தானி யாவை பூர்வீகமாகக் கொண்ட வலதுசாரிகள் குடியேற்றவாசிகள் தங்கியிருந்த இரண்டு கொலிடே இன் எனப்படும் ஆடம்பர விடுதி களையும் தாக்கியிருந்தனர்.

### நாம் எதிர்பார் ... தொடர்ச்சி ...

மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். அதற்கான முன்னெடுப்புகளை தமிழ் தேசிய பரப்பில் உண்மையாக செயற்படும் பற்றாளர்கள் முன்னெடுக்க வேண்டும்.இதன்மூலமே தமிழ் மக்கள் இவ்வாறான விடயங்களை ஆதரிக்கும் நிலைமை ஏற்படுவதுடன் அதன் மூலம் தமிழர்களின் வலுவான கட்டமைப்பு சர்வதேச சமூகத்திற்கு கொண்டுசெல்லப்படும்.இதனை எதிர்கால செயற்பாடுகளாக கொண்டு செயல்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

• • •



## பிரித்தானியாவில் ... தொடர்ச்சி ...

சமுகவலைத்தளங்களால் ஏற்படுத்தப்படவில்லை மாறாக கட்டுப்பாடு இழந்த குடியேற்றவாசிகளின் வரவு, எல்லைகளைப் பாதுகாக்க தவறியமை, தோல்வியடைந்த பல்கலாசரா வாழ்க்கை முறை அதாவது இந்த முறமை மக்களை இணைப்பதற்கு பதிலாக பிரித்துள்ளது.

இந்த காரணிகள் கடந்த 20 -30 வருடங்களாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது என தெரிவித்துள் ளார் பேரசிரியர் மற் குட்வின்.

இந்த வன்முறைகளை பார்க்கும் போது ஒரு இனப்போராகவே தெரிகின்றது. அதாவது உள்நாட்டுப் போர். இது கூட பல்கலாசார இனங்களின் கூட்டு வாழ்வின் தோல்வியாகும். அதாவது பல இனங்கள் கூடி வாழ்வதற்கு பதிலாக பிரிந்து வாழும் நிலையை தோற்றுவித்துள்ளது. அதாவது பல இன மக்களும் இனம், மதம் போன்வற்றால் பிரிந்து நிற்கின்றனர்.

பிரித்தானியா மக்கள் ஒன்றாக சேர்ந்து ஒரு கோட்டில் நிற்கின்றனர். அது அவர்களின் அரசியல் அடையாளமாக அவர்கள் கருதுகின்றனர். எனவே இந்த வன்முறை மிகவும் முக்கியமானதாக நாம் பார்க்கவேண்டும்.

ஏனெனில் இந்த தடவை மிக அதிகளவான மக்கள் ஒருங்கிணைந்து வன்முறையில் ஈடுபடுகின்றனர். அவர்கள் பெருமளவான நகரங்களுக்கும் அது விரைவாக பரவி வருகின்றது. வன்முறைகளை தடுக்க முடியாது அரசியல் வட்டாரங்கள் தடுமாறி நிற்கின்றன. எனவே இந்த வன்முறைகள் தொடரும் என்றே நான் நினைக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

மிகவும் பயங்கரமான நிலையாகவே தற்போதைய வன்முறைகளை நான் பார்க்கின்றேன். பிரித்தானியா மக்கள் தமது மனவலிமையை இழந்துவிட்டனர். அரசியல்வாதிகள் மீது அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையும் இழந்துவிட்டனர். அரசியல்வாதிகளும் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை இவை தான் தற்போதைய நிலைக்கு காரணம் என தெரிவித்துள்ளார் London School of Economics and Political Science பேராசிரியரும் நேட்டோ அமைப்பு மற்றும் பிரித்தானியா பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆலோசகருமான பேராசிரியர் கைதியன் பிறின்ஸ்.

1997 ஆம் ஆண்டில் இருந்தே குடியேற்றவாசிகளை கட்டுப்படுத்த பிரித்தானியா அரசு தவறிவிட்டது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். அரசியல்வாதிகளின் பொய்களே இந்த கலவரத்தின் பின்னனி என தெரிவித்துள்ளார் 42 வருடங்களாக பிரித்தானியாவின் காவல்துறையில் பணியாற்றி நோர்மன் பிரன்மன் தெரிவித்துள்ளார்.

கடந்த 15 வருடங்களாக பிரித்தானியா மக்களிடம் வளர்ந்துவந்த மனக்குமுறல்கள் தற்போது வெடித்துள்ளது. 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்முறையும் மார்க் டஹன்(29) என்ற ஆபிரிக்க இனத்தை சேர்ந்தவரும், வன்முறைக் குழு ஒன்றின் உறுப்பினருமானவர் காவல்துறையினரால் கொல்லப்பட்டதை தொடர்ந்தே உருவாகியிருந்தது.

இந்த வன்முறையில் 3,000 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். 1,980 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டிருந்தது. 200 மில்லியன் பவுண்ஸ்கள் பெறுமதியான சொத்துக்கள் அழிவடைந்திருந்தன.

எல்லா வன்முறைகளும் இனவாதம் சார்ந்ததாகவே இருக்கின்றது. சட்டவிரோதக் குடியேற்றவாசிகளை கட்டுப்படுத்தாது விட்டால் இந்த வன்முறைகள் தொடரவே செய்யும். வன்செயலில் ஈடுபடுபவர்களை உடனடியாக தண்டிக்க அரசு முற்பட்டுள்ளது. ஆனால் அவர்களை அடைப்பதற்கு சிறை போதாது. அதற்காக தற்போது சிறையில் உள்ள கைதிகளில் 40 விகிதமான சிறைக்காலத்தை நிறைவு செய்த ஆயிரக்கணக்கானவர்களை விடுதலைசெய்ய அரசு முற்பட்டுள்ளது.

ஆனால் அரசின் இந்த நடவடிக்கை தற்போது உருவாகியுள்ள புயலை சுனாமியாக மாற்றும் சாத்தியங்களே உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது வன்முறையில் ஈடுபடுபவர்களை முன்று பிரிவாக பிரிக்கலாம் என தெரிவித்துள்ளார் பேராசிரியர் மத்தியூ பெட்மான்.

சமூகவலைத்தளத்தில் இயங்கும் மிதவாத வலதுசாரிகள், பிரித்தானியாவின் நலனில் அக்கறை கொண்ட மிதவாத குழுவினர், பிரித்தானியாவே முதன்மையானது என்ற குழுவினர். இவையே அந்த 3 குழுக்களுமாகும்.

தற்போது தாக்கப்பட்ட முஸ்லீம்களின் பள்ளிவாசல்கள், மற்றும் குடியேற்றவாசிகளின் தங்குமிடங்கள் என்பன இந்த குழுக்களின் நீண்டலாக இலக்கு. மக்களிடம் ஒரு வெறுப்பு மெல்ல மெல்ல உச்சம் பெற்று வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் கோவிட்-19 நெருக்கடி, அதன் பின்னர் ஏற்பட்ட உக்ரைன்போர், ரஸ்யாமீது விதிக்கப்பட்ட தடைகள், குதீஸ் அமைப்பினரின் தாக்குதலால் முடக்கப்பட்ட செங்கடல் அவற்றால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பே பிரித்தானியா மக்களின் இந்த விரக்தியான நிலமைக்கு காரணம் எனவும் கூறப்படுகின்றது.

இதனிடையே, அமெரிக்காவின் செல்வந்தரும் தற்போதைய அரசதலைவர் வேட்பாளர் டெனால்ட் டிறம்பின் தீவிர ஆதரவாளரும், ஆலோசகருமான எலொன் முஸ்க் பிரித்தானியாவில் உள்நாட்டுப் போர் ஒன்று ஆரம்பமாகப்போகின்றது என பதிவிட்டது பிரித்தானியா அரசை சினமடைய வைத்துள்ளது.

முஸ்க்கின் கருத்திற்கு ஆதாரமில்லை என பிரித்தானியா பிரதமரின் பேச்சாளர் தெரிவித்தபோதும், பிரித்தானியா காவல்துறையினர் ஒருபக்கச் சார்பாக நடப்பதாக முஸ்க் அதற்கு பதிலளித்துள்ளார்.

ஆனால் சவுத்போட்டில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கொலையில் ஈடுபட்டவர் பயங்கரவாதி எனவும், இந்த தாக்குதல் ஒரு பயங்கரவாதத் தாக்குதல் எனவும் அது சட்டவிரோதமாக படகில் வந்த முஸ்லீம் குடியேற்றவாசி ஒருவரால் மேற்கொள்ளப்பட்டதாக தவறான தகவல்களை முஸ்கின் டுவிட்டர் தளமே பரப்பியதாக பிரித்தானியா குற்றம் சுமத்தியுள்ளது.

அண்மையில் வெனிசுலாவில் ஒரு இராணுவப்புரட்சியை ருவிட்டர் தளம் மேற்கொள்ள முனைந்ததாக குற்றச்சாட்டக்கள் எழுந்திருந்தன. இந்த வாரம் பங்களாதேசத்தில் இடம்பெற்ற மாணவர் புரட்சியிலும் ருவிட்டர் தளத்தின் பங்களிப்பு கணிசமானது.

அதாவது சமூகவலைத்தளங்கள் பல சமூகங்களில் குழப்பங்களை உண்டுபண்ணுவது கடந்து தற்போது நாடுகளில் குழப்பங்களை உண்டுபண்ணும் நிலைக்கு சென்றுள்ளதற்கு பிரித்தானியா கலவரமும் ஒரு எடுத்துக்காட்டு.

• • •

## இஸ்மாயில் ஹனி ... தொடர்ச்சி ...

கருதுகிறார்கள்.சில அமெரிக்க பாதுகாப்புதுறை நிபுணர்களின் கருத்து இதுவாகத்தான் இருக்கிறது. அத்துடன் மத்திய கிழக்கில் முழு அளவிலான போர் ஒன்று வெடித்தது அது நீண்டகாலம் நீடித்தால் வியட்னாமிலும் ஆப்கானிஸ்தானிலும் என்ன நடந்ததோ அது தான் அமெரிக்காவுக்கு மத்தியகிழக்கிலும் நடக்கும்; அதுவும் ரஸ்யாவும் சீனாவும் ஈரானுடன் கைகோர்க்க தயாராக இருக்கும் போது. எனவே, தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையோடு போயிற்று என்பதைப்போல அமெரிக்கா தன்னைக் காப்பாற்றி கொள்வதற்காக நெதன்யாகுவை பலிகடா வாக்க முயலலாம்.

உயிரோடு இருந்த இஸ்மாயில் ஹனியேவை விட அவரது இறப்பு இப் போது இவர்களுக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது. இப்படுகொலை மத்தியகிழக்கில் அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் எதிராக பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. ஈரான் தனது சுயகௌரவத்தைக் காப்பற்றிக்கொள்வதற்கும், லெபனான் - ஹிஸ்புல்லா தனது படைத்தளபதி புவாட் ஷுக்ர் (Fuad Shukr) பெய்ரூட் மீது 30.07.2024ம் திகதி - இஸ்மாயில் ஹனியே கொல்லப்படுவதற்கு சில மணித்தியாலங்கள் முன்பதாக- இஸ்ரேல் நடத்திய வான்தாக்குதலில் கொல்லப்பட்டதற்கு பழிதீர்ப்பதற்கும், மத்தியகிழக்கில் குமுறிக் கொண்டிருக்கும் முஸ்லிம் மக்களை சாந்தப்படுத்துவதற்காகவும் இஸ்ரேல் மீது ஒரு கடும் தாக்குதல் நடத்தப்படும் என எதிர்பார்க்கலாம். ஆயினும் அதனை விரைவில் முடிவுக்குக்கொண்டுவருவதற்கே அமெரிக்கா முயலும். இல்லை என்றால் இஸ்ரேலினதும் அமெரிக்காவினதும் இருப்புக்கு மத்திய கிழக்கில் நாள் குறிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. மறுபுறத்தில் வளர்ந்துவரும் ஈரானால் தனது ஆதரவு போராட்டக்குழுக்களுக்கு நீண்டகாலம் ஆயுதம் வழங்கி பொருளாதார ஆதரவு நல்க முடியாது. அந்த அளவுக்கு நவீன ஆயுதங்களோ பொருளாதார பலமோ அதனிடம் கிடையாது. எனவே போர் ஒன்று வெடிக்குமானால் அமெரிக்காவும் ஈரானும் சீக்கிரமே அதனை கௌரமானமுறையில் முடிவுக்கு கொண்டுவரவே விரும்பும்.

அமெரிக்காவிலே நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனதிபதி தேர்தல் போட்டி சூடுபிடித்திருக்கும் நிலையில் பைடன் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கி அதிலே நெதன்யாகு குளிர்காய்கிறார். எனவே தான் அமைதிக்கான அனைத்து முயற்சிகளுக்கும் அவர் தடையாக நிற்கிறார். போர்நிறுத்த பேச்சுவார்த்தை என்றால் ஹமாஸ் தரப்பில் நிதானமாக பேசக்கூடிய ஒருவராக இஸ்மாயில் ஹனியே இருந்தார். அவரை நிரந்தரமாக நீக்கியது நெதன்யாகு தான் பெற்ற வெற்றியாக இப்போது கருதினாலும் உயிரோடிருந்த இஸ்மாயில் ஹனியேயை விட அவரது மரணம் ஆபத்தானது என்பதை இஸ்ரேலும் உலகமும் வெகுவிரைவில் உணரும்.

**முற்றும்**

## தமிழ்ப் பொது ... தொடர்ச்சி ...

சுமந்திரனும்தான். ஏற்கனவே இருந்ததை எடுத்துவிட்டு, மீண்டும் தருவதாக வாக்குறுதியளிப்பது தமிழர்களை அடிமட்ட முட்டாள்களாகக் கருதிச் செயற்படும் ஒரு உபாயம்தான். அதே இருவரும்தான் இப்போது மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்று அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டிருக்கின்றார்கள். மற்றொரு வகையில் பார்த்தால் ஏற்கனவே இருந்த மாகாண சபைதான் இவர்களின் தீர்வு. அதுவும் 13 மைனஸ்தான்!

இந்தப் பின்னணியில்தான் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் அவசியமாகின்றார். அரயநேத்திரன் 2004 விடுதலைப் புலிகளால் அரசியலுக்குள் கொண்டுவரப்பட்டவர். முன்னாள் பத்திரிகையாளர்.

“தமிழ்த் தேசியத்துக்கான குறியீடாகவே நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறேன். நான் வெறும் அடையாளம் மட்டுமே. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியாக வருவதற்காக நான் தேர்தலில் போட்டியிடவில்லை” என்று மிகவும் நிதானமாகவே அரியநேத்திரன் தனது தேர்வு குறித்து கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் முதலாவது கட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

• • •

**நிறைவேற்று ... தொடர்ச்சி ...**

கோத்தபாயவுக்கு 175823 வாக்குகள் கிடைத்தன. நுவரெலியா - மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் 75499 வாக்குகள் கோத்தாவுக்கு கிடைத்தன. பதுளை மாவட்டத்தில் சஜித் பிரேமதாசா பசறை, அப்புத்தளை, ஹாலிஎல ஆகிய பிரதேசங்களில் வெற்றிபெற்ற போதிலும் அந்தத் தொகுதிகளில் கோத்தபாய ராஜபக்சவுக்கும் அதிகளவான வாக்குகள் கிடைத்தன. மாத்தளை மாவட்டத்தில் இறத்தோட்டை, தம்புள்ளை, லக்கலை ஆகிய தொகுதிகளில் கோத்தபாய வெற்றி பெற்றிருந்தார். இந்தவகையில் மலையகத்தில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் கோத்தபாயவுக்கு அதிகளவான வாக்குகள் கிடைத்தமையை அறிந்துகொள்ள முடிகின்றது. எவ்வாறெனினும் இவரது ஆட்சிக் காலத்திலும் மலையக மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

**வன்செயல்கள் அதிகரிப்பு**

இதேவேளை மஹிந்த ராஜபக்ச இரண்டு தடவைகள் நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்திருந்தார். மலையக மக்கள் அவரது வெற்றிக்கும் பக்கபலமாக இருந்தனர். இந்நிலையில் வரவு செலவு திட்ட முன்மொழிவுகள், தேர்தல் விஞ்ஞாபனங்கள் போன்றவற்றில் கவர்ச்சியான வாக்குறுதிகள் பலவற்றையும் அவர் மலையக மக்களின் நலன்கருதி வழங்கி இருந்தார். வீடமைப்பு, பொருளாதார மேம்பாடு, இளைஞர் அபிவிருத்தி எனப்பலவும் இதில் உள்ளடங்கும். எனினும் வாக்குறுதிகள் காற்றில் பறந்த நிகழ்வுகளே அதிகமாகும். இதேவேளை தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் மலையக மக்களின் காணியுரிமை, தேசிய நீரோட்டத்தில் அவர்களை இணைத்துக் கொள்ளுதல், சம்பள உயர்வு போன்ற பல விடயங்கள் தொடர்பில் வாக்குறுதிகளை வழங்கியுள்ளார். இந்நிலையில் சம்பள உயர்வு இப்போது புஷ்வாணமாகியுள்ளது. சம்பள விவகாரமும், அது தொடர்பான வழக்கும் இருக்கும் நிலையில் கடந்த மே மாதம் 21ம் திகதி பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரின் செயலாளரினால் வெளியிடப்பட்ட பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளமாக 1350 ரூபாவும், விசேட கொடுப்பனவாக 350 ரூபாவுமாக மொத்தம் 1700 ரூபா அடிப்படை சம்பளத்துக்கும், மேலதிக கொழுந்து பறிப்புக்காக 80 ரூபாவுக்கான வர்த்தமானி அறிவித்தல் இப்போது இரத்து செய்யப்பட்டுள்ளமையும் தெரிந்ததாகும். இவ்வாறாக நாட்டின் ஜனாதிபதிகளையும், ஆட்சியாளர்களையும் தீர்மானிக்கும் மலையக மக்கள் தேர்தலின் பின்னர் புறந்தள்ளப்படுவதே கடந்தகால வரலாறாகும்.

நிறைவேற்று ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் சிறுபான்மை மக்களுக்கு அதிகளவு நலன்கள் கிடைக்கும் என்று கருதப்பட்டபோதும் இது சாத்தியப்படவில்லை. இக்காலப்பகுதியில் வன்செயல்கள் மேலெழும்பிய நிலையில் இதனால் சிறுபான்மை மக்கள் கண்ணீர் சிந்தும் நிலைமை ஏற்பட்டது. இந்திய வம்சாவளி மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் 1981, 1983, 1986 என்று காலத்துக்கு காலம் இடம்பெற்றது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாத 1956, 1958, 1960 காலப்பகுதியிலும் இம்மக்கள் மீதான நெருக்கடிகளுக்கு குறைவிருக்கவில்லை. இத்தகைய தாக்குதல்கள் மற்றும் நெருக்கீடுகளுக்கு உள்ளான இந்திய வம்சாவளி தமிழர்களில் ஒரு பகுதியினர் இவற்றில் இருந்து தப்பிக்கொள்ளும் நோக்குடன் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு குடிபெயர்ந்தனர். மற்றுமொரு பகுதியினர் குறிப்பாக சிங்கள மக்கள் செறிவாக வாழ்கின்ற காலி, மாத்தறை, இரத்தினபுரி போன்ற பகுதிகளில் குடியேறி சிங்கள மக்களுடன் வாழ விரும்பினர். இதனால் அவர்களின் மொழி, கலாசார நிலைமைகள் கூட சில வேளைகளில் பாதிப்படைந்தது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் தழும்புகள் இவ்வாறாக, மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்கள் மீது பதிந்துள்ள நிலையில் எதிர்வரும் செப்டம்பர் 21 ம் திகதி புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான தேர்தல் இலங்கையில் இடம்பெறவுள்ளது. இந்நிலையில் இத்தேர்தலில் தாம் ஆதரிக்கும் வேட்பாளரிடம் மலையக மக்களின் நலன்சார் கோரிக்கைகள் பலவற்றையும் முன்வைத்து அதனைசாதகமாக்கிக்கொள்ளமலையககட்சிகள் முற்பட்டு வருகின்றன. எவ்வாறெனினும் முன்னைய தழும்புகள் அதிகமுள்ள நிலையில் வெறும் வாக்குறுதிகளால் மலையக சமூகத்தை திருப்திப்படுத்த ஆட்சியாளர்கள் முற்படுதல் கூடாது என்பதே பலரினதும் எதிர்பார்ப்பாகும்.

• • •

**ஜனாதிபதி ... தொடர்ச்சி ...**

சென்று இரு பிள்ளைகளையும் படிக்க வைத்து தற்போது ஒருவர் பல்கலைக்கழக கல்வியை தொடர்வதுடன் மற்றொருவர் உயர்தரத்தில் கற்று வருகிறார். தற்போது கோழி வளர்ப்பு மூலம் அன்றாட ஜீவனோபாயத்தை கொண்டு செல்ல வேண்டியுள்ளது” என்றார்.

இது போன்றுதான் ஏனைய குடும்பங்களும் தமது அன்றாட வாழ்வாதாரத்திற்காக தினம் தினம் போராடி வருகின்றன. தற்போதைய பொருளாதார நெருக்கடியில் தமது குடும்பத்தின் வயிற்றுப் பசியைப் பார்க்கின்ற அதேநேரம், தமது உறவுகளுக்காக போராட்டத்திலும் ஈடுபடவேண்டியுள்ளது.

2700 நாட்களுக்கு மேலாக வடக்கு கிழக்கில் எட்டு மாவட்டங்களில் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் போராட்டங்கள் தொடர்ந்து வருகின்றன.

இதுதொடர்பில்திருகோணமலைமாவட்டவலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி செபஸ்டியன் தேவி தெரிவிக்கையில், “16 வருடங்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம். இலங்கை அரசாங்கம் தீர்வினை தரவில்லை எத்தனையோ ஆணைக்குழு வந்தும் நீதியை தரவில்லை. சர்வதேசம் ஊடாக எங்களுக்கான உரிமை நீதியை கோரி நிற்கிறோம். நீதி தான் தேவை நிதி தேவையில்லை. ஐக்கிய நாடுகள் சபை இதற்கான எந்தவித விசாரணையை முன்னெடுத்தும் நீதியை தரவில்லை. எனது மகன் 2008.03.19 அன்று அரச படையால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். எட்டு மாவட்டங்களில் எங்களுக்கான நீதி தேவை என்ற அடிப்படையில் போராட்டங்களை மேற்கொள்கிறோம். காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் (OMP) போன்றன வெறும் கண் துடைப்பே. இதனால் சர்வதேச விசாரணை தேவை என்பதே எனது கோரிக்கை” என்றார்.

சர்வதேச நீதிப் பொறிமுறை, ஆணைக்குழு தொடர்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஐங்கரன் குகதாசன் தெரிவிக்கையில், “இலங்கை அரசாங்கத்தால் காணாமல் ஆக்கப்பட்ட சமவாயம் பின்னர்தான் உருவாக்கப்பட்டது . இதனால் உள்ளூர் பொறிமுறையின் கீழ் வழக்கு தாக்கல் செய்வதில் எந்த பலனும் இல்லை. சர்வதேச பொறி முறையானது பலவந்தமாக அல்லது விருப்பத்துக்கு மாறாக கொண்டு செல்லப்பட்டு காணாமல் போனவர்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் பணிக் குழு ( working Group ) வில் சாட்சியங்களை முன்வைத்தாலும் அவர்களால் இலங்கை அரசாங்கத்துக்கு வெறும் பரிந்துரைகளை மாத்திரமே வழங்கலாம். பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்தாது என்பதே எனது தனிப்பட்ட கருத்து. இதே போன்று காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஆணைக்குழு என்பதும் நீதி வழங்குவதற்கான அதிகாரம் கொண்டதல்ல. உண்மைகளை கண்டறிவதற்காக உருவாக்கப்பட்டதே இதன் மூலம் எந்தவித பலனும் இல்லை” என்றார்.

2022 இல் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியான பின்னர் காணாமலாக்கப்பட்ட மக்க ளின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் துளிர்விட்டது. எனினும் கடந்த இரண்டு வருடங்களில் அவர் எந்த வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. வடக்கு கிழக்கிற்கு பல தடவைகள் விஜயம் செய்துள்ள அவர் காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களை சந்திப்பதற்கு முயற்சிக்கவுமில்லை.தற்போது ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலை யில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தேர்தல் பிரசாரத்தில் முக்கிய இடம் வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் அரசியல்வாதிகள் தாம் ஆதரிக்கும் வேட்பாளர்களிடம் இந்த விவகாரத்தை பிரதான கோரிக்கையாக முன்வைக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்ட மக்களுக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வரும் தமிழ் தேசிய மக்கள் முண்ணனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் இது தொடர்பில் தெரிவிக்கையில் “ முள்ளிவாய்க்கால் வட்டுவாகல் பகுதி மற்றும் வவுனியா செட்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்த போராளிகள் உட்பட பல மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டுள்ளார்கள். இதற்கான முழு பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டும். இதனையே எமது கட்சியான தமிழ் தேசிய மக்கள் முண்ணனியும் வலியுறுத்தி நிற்கிறது” என்றார்.

ஒட்டுமொத்தமாக சர்வதேச சமூகத்தின் சுதந்திரமான பொறி முறையை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரி நிற்கின்றனர். இலங்கை அரசாங்கத்திடம் இருந்து சர்வதேச சமூகம் புதிய பொறிமுறைகள் ஊடாக நீதியைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையிலேயே இந்த மக்கள் போராடி வருகின்றனர். நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை சலுகைகளுக்காக தாரை வார்க்காது காணாமல்போனார் பற்றிய உண்மைகளைக் கண்டறிந்து நீதியைப் பெறுவதற்கான அழுத்தங்களை வழங்க பயன்படுத்த வேண்டும் என்பதே அனைவரதும் வேணவாவாகும்.

• • •

**மூலோபாய ... தொடர்ச்சி ...**

அனுப்பியிருந்தது. அந்த கப்பல் ரஸ்யாவின் சென் பீற்றேஸ்பேர்க் துறைமுகத்தில் கட்டப்பட்டு இந்திய கடற்படையில் 2004 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டிருந்தது என தூதரக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஸ்யாவினதும் இந்தியாவினதும் உறவுகளில் பாதுகாப்புத்துறை மிகவும் முக்கியமானது. இரு நாடுகளும் இணைந்து ஒவ்வொரு வருடமும் கடற்படை ஒத்திகைகளை மேற்கொண்டு வருகின்றன. இந்தியாவின் ஆயுதங்களும் பெருமளவானவை ரஸ்ய தயாரிப்புக்களே.

ரஸ்யாவின் 328 ஆவது கடற்படை தினத்தில் சீன கடற்படையின் கப்பல்களும் பங்குபற்றியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.